MONTHLY

# News View

නිව්ස් වීව්

ஒரு புதிய பார்வை...

LKR 20.00 PAGES : 16 ISSUE : 03 SEP - OCT - 2008









**Access Programme**

IT | English | Life Skills

4 Months
Full Time
Monday - Friday
08.30-4.30

**After A/L...**

உங்கள் வளமான எதிர்காலத்திற்கு உறுதியான அடித்தளம்...

British College of Applied Studies

344, Peradeniya Road, Kandy.
Tel: 081-2246300, 2224731, 0777-634508

**Certificates**

1. Prof. Dip. in IT
2. Dip. in Programming
3. Dip. in Web Development
4. Dip. in Hardware Eng.
5. Dip. in English
6. First Certificate in English by College of Central London

www.bcas.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிகமயில் இன மோதல்

கடந்த வாரம் மாத்தறை வெலிகமயில் இடம்பெற்ற இன வன்முறையில் ஆகக்குறைந்தது ஏழு கட்டிடங்கள், ஒரு பள்ளி மற்றும் பெட்ரோல் நிலையம் போன்றன காடையர்களால் சேதத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளன. இதனுடன் தொடர்புபட்ட இரண்டு சிங்களவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நம்பத்தகுந்த வட்டாரங்களின் அடிப்படையில் இவ்வன்முறைக்கான காரணம் இரண்டு முஸ்லிம் மற்றும் மூன்று சிங்கள சகோதரர்களுக்கிடையே இடம் பெற்ற தனிப்பட்ட தகராறாகும். ஆனால் அத்தகராறு அவ்விடத்திலே துரிதமாக நிறைவுபெற்றது. பின்னர் அன்று மாலை 7.00 மணியளவில் சிங்கள இளைஞர்களின் குழுவொன்று வெலிகம முஸ்லிம் ஹோட்டலின் முன்னால் புதிய வாக்குவாதத்தை உண்டு பண்ணி சர்ச்சையில் ஈடுபட்டு சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர்.

இந்நடவடிக்கைகளுக்கு முஸ்லிம்கள் மாற்று நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. ஆனால் இக்கலவரங்கள் சுமுக நிலை அடைந்த பின்னர் இரவு 11.30 மணியளவில் காடையர்கள் அருகிலுள்ள சிங்களக் கிராமத்திலுள்ளவர்களை அழைத்து வந்து வெலிகம பழைய தெருவில் அமைந்துள்ள மீரா சாஹிபு ஜும்ஆ பள்ளி வாயிலைத் தாக்கினர். பின்னர் வியாபார நிலையங்களைத் தாக்குவதற்கு நகரில் நுழைந்தவர்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல வியாபார நிலையங்களை தாக்கினர். இத்தாக்குதல்கள் சுற்றியுள்ள பல பொலிஸ் நிலையங்களிலிருந்தும் வரவழைக்கப்பட்ட பொலிஸாரின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. தற்போது சகல பள்ளிவாயில்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் முஸ்லிம் வொட்ச் இணையத்தளத்தின் செய்தியில் குறிப்பிடப்படிருந்தது. ■



சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்நடத்தை திணைக்களத்தின் அனுசரணையுடன் அக்குறணை பிரதேச செயலகத்தினால் செப்டம்பர் 16ம் திகதி கொனகலகல பௌத்த விகாரையில் இடம்பெற்ற நடமாடும் சேவையினை பிரதேச செயலாளர் மேற்பார்வையிடும் போது எடுக்கப்பட்ட படம்.

# மத்திய மாகாணத்தில் தற்காலிக பாலங்களுக்குப் பதிலாக நிரந்தர பாலம் அமைத்துக் கொடுக்கும் திட்டம்

மத்திய மாகாணத்தில் பின்தங்கிய கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் ஓடைகள், ஆறுகளினூடாக கடந்து செல்வதற்கு பயன்படுத்தும் தற்காலிக பாலங்களுக்குப் பதிலாக நிரந்தர பாலங்களை அமைத்துக் கொடுக்கும் விசேட திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

இதற்கான நிதி மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏகநாயக்க மூலமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பிரதேச செயலகத்தினூடாகவும், பிரதேச சபையினூடாகவும் நடைமுறைப் படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ■

# ஸியா வைத்தியசாலையின் சிறுவர் பிரிவு சுமார் 10 லட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம்





அக்குறணை தனவந்தர் ஒருவரினால் ஸியா வைத்தியசாலையின் சிறுவர் பிரிவு சுமார் 10 லட்சம் ரூபா செலவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு கடந்த மாதம் கண்டி மாவட்ட சுகாதார அமைச்சின் செயலாளர் விஜித ஏகநாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

மத்திய மாகாண சுகாதார அமைச்சில் போதியளவு நிதி இல்லாதிருப்பதால், இவ்வாறான தனவந்தர்கள் முன்வந்து சுகாதாரத்துறைக்கு பங்களிப்புச் செய்வது வரவேற்கத்தக்கது. மேலும், சமூகத்திலுள்ள ஏனைய வசதி படைத்தவர்களும் இவ்வாறு செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தயாராக வேண்டும் எனவும் கண்டி மாவட்ட சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். ■

# பைதுஸ் ஸகாத்தின் விசேட போட்டி நிகழ்ச்சி

இஸ்லாத்தைத் தழுவியவர்களின் இஸ்லாமிய அறிவை மேம்படுத்தும் நோக்கில் இப்போட்டி நிகழ்ச்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அடிப்படை விடயங்கள் அடங்கிய ஐம்பது கேள்விகளையும் அதற்கான விடைகளையும் உள்ளடக்கிய தொகுப்பு வழங்கப்பட்டு அதிலிருந்து குழுக்கல் முறையில் கேட்கப்படுகின்ற கேள்விகளில் 20க்கு பதிலளிக்கும் வெற்றியாளர்களுக்கு பைதுஸ் ஸகாத் மூலம் பல லட்சம் ரூபாய் பெறுமதியான பரிசுகள் வழங்கப்படுகின்றது.

# சான்றிதழ் வழங்கும் வைபவம்

அக்குறணையின் பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் நலன் கருதி Axiom நிறுவனத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட கணனிப் பயிற்சி நெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும், கலை நிகழ்ச்சியும் எதிர்வரும் ஒக்டோபர் 05ம் திகதி அஸ்ஹர் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுகளில் பொது மக்களும் கலந்து சிறப்பிக்குமாறு Axion நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது. இப்பாடத்திட்டங்கள் தொடர்பான மேலதிக விபரங்களை www.axiomict.co.cc என்ற இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

# இலங்கை விசேட அதிரடிப்படைக்கு (STF) ஆட்சேர்ப்பு

## அக்குறணையில் விளக்கக் கருத்தரங்கு

இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் விசேட அதிரடிப்படைக்கு புதிய உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வது தொடர்பான அரச உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் விசேட விளக்கக் கருத்தரங்கு, கடந்த செப்டம்பர் 23ம் திகதி அக்குறணை அஸ்ஹர் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் வேண்டுகோளுக்கிணங்க அக்குறணை பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட இக்கருத்தரங்கில் ஜனாதிபதி செயலகத்தின் மாவட்ட இணைப்புப் பணிப்பாளர் திரு. J.B ஏக்கநாயக்க கலந்து கொண்டார். வழமையாக 200 அதிகாரிகள் மாத்திரமே இச்சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். ஆனால் வழமைக்கு மாறாக இம்முறை சுமார் 3000 பேர் இச்சேவைக்கு இணைத்துக் கொள்ளப் படவுள்ளதாகவும், ஒருவரின் பயிற்சிக்காக சுமார் ஒரு மில்லியன் ரூபாவினை அரசு செலவிடுவதாகவும் இக்கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் ஒக்டோபர் 15ம் திகதி கண்டி பொலிஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளதுடன், இது தொடர்பாக தகுதியானவர்களின் தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஊர்களுக்கு விசேட அதிகாரிகள் குழுவொன்று ஒப்டோபர் 08ம் திகதி வருகை தரவுள்ளனர். தாய் நாட்டின் தற்போதைய நிலையினை கருத்திற் கொண்டு இவர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு பிரதேச வாசிகளை பிரதேச செயலாளர் கேட்டுக்கொள்கின்றார். ■

## இம்முறை க.பொ.த. (உ/த) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

# "இஸ்ரா"வின் மூன்று நாள் பயிற்சி முகாம்

மாணவர்களின் ஒழுக்க மேம்பாட்டையும், செயற்திறனையும் விருத்தி செய்யும் நோக்கில் இம்முறை க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. கடந்த 12,13,14ம் திகதிகளில் ஹன்தான ரத்னசிரி விக்ரமநாயக்க தேசிய பயிற்சி மத்திய நிலையத்தில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில் மாணவர்களுக்கு தலைமைத்துவம், எதிர்கால வழிகாட்டல் மற்றும் ஆன்மீகம் போன்ற பிரதான மூன்று பகுதிகளாக பயிற்சியளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் அக்குறணை, கல்ஹின்ன மற்றும் உக்குவல மாணவர்கள் பங்கேற்றனர். பயிற்சி முடிந்த பின்னர் நடைபெற்ற விசேட ஒன்று கூடலில் இம்மாணவர்கள் இஸ்ராவுடன் இணைந்து இம்முறை க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களின் சித்தி வீதத்தினை அதிகரிப்பதற்கான விசேட திட்டம் ஒன்றினை அமுல்படுத்தவதற்கு முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது என இஸ்ராவின்



பயிற்றுவிப்புப் பொறுப்பாளர் Dr. அலவி தெரிவித்தார்.

அக்குறணையில் பல்வேறு சமூக முன்னேற்ற செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற இஸ்ரா நிறுவனம் புனித ரமழான் மாதத்தில் மாணவிகளுக்கான 10 நாள் தொடர் பயிற்சியொன்றினை நடாத்தியமை மற்றும் சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவு விநியோகத்தினை நடைமுறைப்படுத்தியமை என்பன குறிப்பிடத்தக்கது. ■

தினகரன் (16-09-2008)

# இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (SLIATE)

## 2009 கல்வி ஆண்டுக்கான மாணவர்களை அனுமதித்தல்

மேற்படி நிறுவனத்தினால் நாடு முழுவதிலும் நடாத்தப்படும் உயர் தேசிய டிப்ளோமா, தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு 2007ம் ஆண்டு அல்லது அதற்கு முன் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா, உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா, உயர் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (விவசாயம்), உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா, உயர் தேசிய வியாபாரக் கல்வி டிப்ளோமா, தேசிய வியாபார நிதி டிப்ளோமா போன்ற பாடநெறிகள் இடம்பெறும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி ஒக்டோபர் 17**

மேலதிக விபரங்களுக்கு செப்டம்பர் 16ம் திகதி தினகரனைப் பார்வையிடவும் அல்லது

NewsView அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Web Site: www.sliate.net

## விதாதா வள நிலையத்தின் ஒக்டோபர் மாத பயிற்சி நிகழ்ச்சிகள்

01. யோகட் செய்வது தொடர்பான செயல் முறை விளக்கம்.
02. கையடக்கத் தொலைபேசி திருத்துதல்.
03. கணனிப் பயிற்சி
04. வெனிலா பயிர்ச் செய்கை
05. மரக்கறி பதனிடுதல்.
06. வீட்டுத் தோட்டம் அமைத்தல்.

மேலதிக விபரங்களுக்கு
திரு. சுரங்க பெரேரா
விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அதிகாரி
பிரதேச செயலகம், அக்குறணை.

## முக்கிய சில பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை நிர்வாக சேவை (SLAS-LTD), பட்டதாரிகளுக்கான கமநல சேவைப் பரீட்சை மற்றும் மௌலவி ஆசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு,
பிரதேச செயலாளர்,
அக்குறணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Star of the month



**அல்ஹாஜ் ACM ராஸிக்**
B.A, Dip. in Edu., PG. Dip. in Pub. Admin.
SLAS - I
அமைச்சரவைச் செயலாளர்
இலங்கை புனர்நிர்மாண
அனர்த்த சேவைகள் அமைச்சு

**■ உங்களது குடும்ப பின்னணியுடன் சிறு பராயத்து நினைவுகளை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்?**

இற்றைக்கு 63 வருடங்களுக்கு முன்பு அக்குறணையின் குருகொடை கிராமத்தில் ஹபீப் மொஹமட் அப்துல் காதர், சித்தி மலிகா தம்பதியினருக்கு புதல்வனாக 1944ம் ஆண்டு நான் பிறந்தேன். இறைவனின் கருணையினால் எனது தந்தை நற்குணமானாகவும், சிறந்த தந்தையாகவும், முயற்சியுள்ள வர்த்தகராகவும் முன்னின்று எங்கள் குடும்பத்தை வழிநடத்திச் சென்றார். சிறு வயதிலேயே நான் எனது தாயை இழந்தேன். எனது தந்தை கடுமையாக உழைத்து சிறு பராயத்து வாழ்க்கையை வளம்படுத்தினார். என் சிறு வயதில் எமது குக்கிராமத்தில் மண்வீதிகளில் ஓடி, விளையாடி எனது தந்தையின் கடைக்கு முன்னால், நண்பர்களுடன் கூடி மகிழ்ந்திருந்த காலம் இப்பொழுதும் என் கண்முன் நிழலாடுகின்றது.

**■ உங்கள் ஆரம்ப பள்ளிப் பருவத்து நினைவலைகளை சற்று மீட்டிப் பார்ப்போமா?**

கிராமப் பாடசாலைகளாகிய குருகொடை ஆண்கள் பாடசாலையிலும், குருகொடை பெண்கள் பாடசாலையிலும் பாலர் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்பு வரை எனது கல்வியை ஆரம்பித்தேன். 1955ம் ஆண்டு முதல் அக்குறணை கனிஷ்ட பாடசாலையில் (இன்றைய அஸ்ஹர் கல்லூரியில்) சாதாரண வகுப்பு வரை வெற்றிகரமாக மேற்கொண்டேன். 1962 - 1963ம் வருடங்களில் க.பொ.த. உயர்தரத்தினை கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியில் பயின்றேன்.

**■ படித்த சூழல் பற்றியும் உங்களுக்கு கற்பித்த ஆசான்கள் பற்றியும் கூறுங்களேன்?**

பாடசாலைக் காலத்தில் கல்வி கற்கும் போது படிக்கும் சூழல் என் தந்தையின் அன்பான தூண்டுதலால் சிறப்பாகவிருந்தது. அக்கால கட்டத்தில் மலைநாட்டுப் பாடசாலைளில் கல்வி கற்றுக் கொடுத்த ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்களாவர். திசையறியாத மாணவர்கள் நல்வழியில் வழிநடத்தப்பட்டார்கள். சுருக்கமாகக்கூறின் எனது ஊக்கத்தாலும், தனிமுயற்சியாலும் நான் இத்தகைய சூழல்களை எனக்கு ஆதரவாக எடுத்து முன்னேறினேன். க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழகம் செல்வதற்கு இத்தகைய சூழல் வழிவகுத்தது எனலாம்.

**■ தங்களுடைய முதலாவது பதவியும் பெற்ற அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளுங்கள்?**

எனது 18வது வயதில் அக்காலகட்டத்தில் பின்தங்கிய பகுதியாக இருந்த மாத்தளை மாவட்டத்தில் ஓர் ஆசிரியராக அரச உத்தியோகத்தில் உள்வாங்கப்பட்டேன். இதைத் தொடர்ந்து அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு ஆசிரியப் பயிலுனராக தெரிவுசெய்யப்பட்டு ஒரு புதிய உலகத்தை காணக்கூடிய அனுபவத்தைப் பெற்றேன். அங்கிருக்கும் காலகட்டத்தில் எனது பல்கலைக்கழகப் பிரவேசம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. ஆனாலும் நான் ஆசிரியத் தொழிலை நேசித்ததன் காரணமாக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தொடர்ந்தும் பயிலுனராக எனது இரு வருட காலத்தை நிறைவு செய்தேன்.

அதன் பின்னர் ஆசிரியத் தொழிலில் முழுமூச்சாக ஈடுபட்ட காலத்தில் என் வெளிவாரி பட்டப்படிப்பைத் தொடர்ந்தேன். அப்பொழுது எனது நண்பர்கள் பலர் எனது கல்வியைத் தொடர்வதற்கு முழுமூச்சாக உதவி செய்தமை இன்றுவரை மனதில் நன்றி உணர்வுடன் நினைவு கூர்கின்றேன்.

எனது இளம் பராயத்திலேயே உள்வாரி பட்டதாரியாக நான் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், எனக்கு கிடைக்கப் பெற்ற அரச தொழிலை மிகவும் உயர்வாக மதித்ததன் காரணமாக தொடர்ந்தும் அரச உத்தியோகத்தில் பணிபுரிந்து கொண்டு கல்வியில் முன்னேற்றம் காணும் நோக்கில் முழு முயற்சியுடன் எனது பட்டப்படிப்பை இலங்கை பல்கலைக்கழகத்தில் வெற்றிகரமாக பெற்றுக்கொண்டேன்.

இத்தருணத்தில் என் உள்ளுணர்வு ஒரு முக்கியமான உண்மையை வெளிப்படுத்தும் உந்துதலில் உள்ளது. எனது பாசமிகு தந்தையார் தனது சிறுகடையில் வியாபாரம் செய்து குடும்பத்தை மேம்படுத்தி எங்களை வழிகாட்டி வந்தபோது, நான் ஆசிரியத் தொழிலில் பலபடிகள் முன்னேறி கல்வியில் டிப்ளோமாவையும் என் பட்டத்திற்கு மேலதிகமாகப் பெற்றேன். தந்தை நான் ஒரு டி.ஆர்.ஓ வாக (பிரதேச செயலாளர்) தொழில் புரிய வேண்டும் என்ற புத்துணர்ச்சியிலும் ஆர்வத்திலும் எப்போதும் திளைத்திருந்தார். ஒரு நாள் ஒரு தமிழ் பத்திரிகையில் நிர்வாக சேவையின் டி.ஆர்.ஓ விண்ணப்பம் கோரியிருந்த அறிவித்தலை தந்தையார் தந்து விண்ணப்பிக்குமாறு பணித்தார். அப்போது என் மனதில் தோன்றியதோ முடியாத முயற்சியென்று, என் தந்தையோ நம்பிக்கையுடன் எனக்கு ஊக்கமளித்ததற்கிணங்க விண்ணப்பித்தேன்.

இதேகாலகட்டத்தில் ஆசிரிய சேவையில் உயர்ச்சி பெற்ற கடிதமும் எனக்குக் கிடைத்திருந்தது. நான் இப்பதவியை ஏற்றுக் கொள்வதற்குத் தயாரான நேரத்தில் இலங்கை நிர்வாக சேவையின் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பிதழும் கிடைக்கப் பெற்றது. அக்காலம் பொருளாதார ரீதியிலும் பார்க்க கல்வியை முன்னிலைப்படுத்தும் நிலை தோன்றாத காலகட்டம். மிகக் குறுகிய காலத்தில் எனது நிர்வாக சேவையின் சித்தி கிடைத்தது. முஸ்லிம் சமூகத்தில் அந்நிகழ்வு ஒரு முக்கியமான நிகழ்வு, ஏனெனில் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே எமது சமூகத்தில் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் இருந்தனர். இது எனது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக மாறி, இன்று நான் முழு இலங்கையிலும் ஒரேயொரு முஸ்லிம் செயலாளராக அமைச்சில் கடமை புரிகின்றேன்.

> இலங்கையில் 12 முஸ்லிம் அமைச்சர்கள் அடங்களாக மொத்தமாக 26 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஆனால் அமைச்சரவைச் செயலாளராக இருக்கின்ற ஒரேயொரு முஸ்லிம் இவராவார்...

எனது நிர்வாக சேவையில் முதலில் நான் காலி மாவட்டத்திற்கும் பின்பு புத்தளம் கச்சேரி, பொலன்னறுவை கச்சேரி, மாத்தளை கச்சேரியிலும் கடமைகள் புரிந்தேன். இதனைத் தொடர்ந்து நான் இரத்தோட்டை பிரதேச செயலாளராக 07 வருடங்கள் கடமையாற்றினேன். எனது பசுமையான நினைவுகளில் ஏழை, பணக்கார பேதமின்றி சகல இன மக்களுக்கும் சேவை செய்யக் கூடிய ஒரு நல்ல காலமாக இறைவன் எனக்கு அருள்பாளித்ததை மகிழ்ச்சியாக இங்கு வெளிப்படுத்துகிறேன்.

அதன்பின்பு முஸ்லிம் கலாச்சார அமைச்சில் 1997ஆம் ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டு காலவரையில் 05 வருடங்கள் அதன் பொறுப்பு வாய்ந்த மேலதிக செயலாளராக கடமைபுரியும் பாக்கியத்தை பெற்றேன். இக்காலகட்டத்தில் வக்ப் சபையில் பல மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு பல முன்மொழிவுகளைச் செய்தேன். மேலும் அரச அங்கத்தவராக சமய ஆலோசனை சபையில் செயற்பட்டேன். அக்காலகட்டத்தில் தொடர்ந்து 03 வருடங்களுக்கு அரசாங்க புத்தக வெளியீட்டு ஆலோசகராகக் கடமைபுரிந்தேன். இதனைத் தொடர்ந்து நான் புனர்நிர்மாண புனருத்தாபன அமைச்சிற்கு மேலதிக செயலாளராக மாற்றம் பெற்றேன். இக்காலகட்டத்தில்தான் வன்னி புனருத்தாபன அமைச்சு உருவாகி அங்கு நான் மேலதிக செயலாளராக கடமையைப் பொறுப்பேற்றேன்.

அச்சமயம் இலங்கையின் வரலாற்றில் இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவமளித்து அவர்களின் மேம்பாட்டிற்கும், மீள்குடியேற்றத்திற்கும் முக்கிய பங்களிப்பு செய்ய வேண்டியதன் காரணமாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளராக கடந்த 03 வருடங்களுக்கு மேலதிகமாக அதிமேதகு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டு, கௌரவ ரிஸாட் பதியுதீன் அமைச்சரின் மீள்குடியேற்ற, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சில் கடமையாற்றி வருகின்றேன். வடக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கு மட்டுமன்றி இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும், அவர்களது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், மீள்குடியேற்றம் மற்றும் அவர்களது நலன்கள் சார்ந்த நடவடிக்கைகளிலும் கௌரவ அமைச்சரின் வழிநடாத்தலின் கீழ் செயற்பாடுகளை கொண்டு செல்லக்கூடிய வழி கிடைத்துள்ளது. கடந்த 3½ வருடங்களாக நான் செயலாளராக கடமைபுரியும் காலகட்டத்தில் என் கடமையின் காரணமாகவும் பல பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காவும் இலங்கை அரசின் பிரதிநிதியாக பல நாடுகளுக்கு செல்லக்கூடிய பாக்கியம் கிடைத்தது. இதில் பின்லாந்து, சுவிஸ்லாந்து, டுபாய், கட்டார், ஜேர்மனி, பிரான்ஸ் போன்றன குறிப்பிடத்தக்கது. இப் பயணங்கள் எனது அனுபவங்களின் வளர்ச்சிக்கும் அறிவின் மேம்பாட்டிற்கும் பெரிதும் உதவியாக இருந்தன.

**■ இப்பதவியின் போது பெற்ற சில அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

ஆம்! எனது அக்காலப் பகுதியில் பல சிறந்த, சந்தோசகரமான அனுபவங்களைப் பெற்றுள்ளேன். ஆனால் ஒரு மறக்க முடியாத நிகழ்வு என் மனதிலே நிலைத்திருக்கிறது. 2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி கிழக்குமாகாண மீள்குடியேற்றம் சம்பந்தமான ஒரு கூட்டத்திற்கும், அகதி முகாம்களில் தங்கியிருந்த மக்களைப் பார்வையிடுவதற்கும் கௌரவ அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுடன் பல வெளிநாட்டு தூதுவர்கள் அடங்களாக, சில சிரேஷ்ட அதிகாரிகளுடன் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் என்ற வகையில் நான் கொழும்பிலிருந்து ஹெலிகப்டரில் மட்டுநகர் நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தேன். வெபர் ஸ்ரேடியம் என்று அழைக்கப்படும் மட்டு நகரின் மத்தியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் எமது ஹெலிகப்டர் விமானம் அந்த காலைப்பொழுதில் மகிழ்ச்சியான சூழ்நிலையில் தரையிறங்கியது. கௌரவ அமைச்சர் வெளிநாட்டு தூதுவர்கள் என்று எல்லோரும் இறங்கிக் கொண்டிருக்கும் போது நானும் ஏணியில் கால்வைத்தேன். வாழ்க்கையில் நேரடியாக எந்தப் போர் நடவடிக்கைகளிலும் முகங்கொடுத்திராத எனக்கு அதிர்ச்சியாக பல எறிகணைகள் அதே வெபர் விளையாட்டரங்கில் வந்து விழுந்ததும் பலர் காயமடைந்ததும் ஒரு பெரிய திகிலாக இருந்தது. நான் ஏணியில் வைத்த காலை எவ்வாறு மேல் நோக்கி எடுத்து ஹெலியின் கபினுக்குள் சென்றேன் எனத் தெரியவில்லை. ஒரே ஒரு கணம்தான்! நான் ஹெலியின் முற்பகுதிக்கு வந்து விட்டேன். ஹெலி உடனடியாக மேலாக எழுந்து பறக்கத் தொடங்கியது. அசாதாரணத் திறமைகொண்ட விமானமோட்டி மட்டுநகரின் கிழக்கே உள்ள சமுத்திரத்தை நோக்கி என்னையும், என்னுடன் இருந்த இன்னொரு அதிகாரியையும் எடுத்துச்சென்று கொழும்புக்கு திரும்புவதற்கு ஆயத்தம் செய்தார். இலங்கை முழுவதும், சர்வதேச அரங்கிலும் பல்வேறு ஊடகங்களில் பரபரப்பான ஒரு செய்தியாக இந்நிகழ்வு பரவிக்கொண்டிருந்தது. எனது அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், என் குடும்பத்தினர் எவருக்கும் என் விதியின் உண்மை தெரிந்திருக்கவில்லை. இத்தகைய களேபரம் சில மணித்தியாலங்களில் தெளிவடைந்தது. எல்லோரும் ஒருவாறு சுதாரித்துக்கொண்டோம். என்னை பொருத்தவரையில் இறைவனின் அழைப்பு வந்துவிட்டது என்றே எண்ணியிருந்தேன். ஆண்டவனின் கருணையால் எனது சேவையை நான் தொடர்ந்தும் ஆற்றிக்கெண்டிருக்கிறேன்.

**■ அக்குறணை வாழ்மக்கள் பெருமைப்படக் கூடிய வகையில் உயர்வான பதவியை வகித்துக் கொண்டிருக்கும் நீங்கள் NewsView வாசகர்களுக்கு குறிப்பிட விரும்புவது?**

எனது கிராமம், கல்வி வளர்ச்சிக்கான காரணிகள் அனைத்தும் இம்மண்ணில் எனக்குக் கிடைத்த வளங்கள், வசதிகள். இவற்றைக் கொண்டே என் வாழ்க்கையை முன்னேற்றப்பாதையில் கொண்டுவந்துள்ளேன். இம்மண்ணை நேசிப்பவனாக, இம்மண்ணிலே தொடர்ந்து வாழும் ஒருவனாக நான் இன்று, அரச சேவையில் 45 வருடங்களை தொடர்ச்சியாக நிறைவு செய்து, அச்சேவையின் உயர்வான பதவியில் கடமையாற்றும் மகிழ்ச்சியில் இப் பத்திரிகையினூடாக வாசகர்கள் அனைவருக்கும் எனது பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MONTHLY News View

Emex Publication
190/2/1, Market Complex, Akurana, Sri Lanka.
Tel: 081-7201234 Fax: 081-2300055
e-mail: editor.nv@gmail.com

**எல்லோரும் கொண்டாடுவோம்...**

அன்பு உள்ளங்களுக்கு,

NewsView மூன்றாவது இதழில் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. தொடர்ந்தும் எமக்குத் தரும் பேராதரவுக்கு மிக்க நன்றி. புண்ணியம் பூத்துக் குலுங்குகின்ற ஒரு புனித மாதத்தின் இறுதிப் பகுதியில் இருந்து கொண்டிருக்கின்றோம். இறைவனுக்கு அடிபணிந்து. அவனது வெகுமதிகளைப் பெற்றுக் கொண்ட பூரிப்பில் "பெருநாள்" என்னும் பெரும் கொண்டாட்டத்தை எதிர்பார்த்து அதற்கான தயாரிப்புகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். எனவே, அது குறித்த சில கருத்துக்களை முன்வைப்பது பொருத்தம் என்று கருதுகிறோம். எம்மை எதிர் நோக்கியிருப்பது "ஈகைத் திருநாள்" இயன்றவரை கொடுத்து அனைவரையும் பெருநாள் கொண்டாடவைக்க வேண்டும் என்பது இதன் பின்னால் உள்ள தத்துவமாகும். அந்நோக்கில்தான் இஸ்லாம் ஸகாதுல் பித்ரை கடமையாக்கியிருக்கின்றது. அவ்வாறெனில் இத்திருநாள் வியாபாரிகளதும், பணக்காரர்களதும் பெருநாளாக மட்டுமன்றி ஏழைகளதும், நலிவுற்றவர்களதும் பெருநாளாகவும் இருக்க வேண்டும். எனவே, வசதியிருப்பவர்கள் ஏழைகளை, அநாதைகளை, தேவையுடையவர்களைத் தேடி உதவிகள் புரிந்து இம்மகிழ்ச்சியில் இணைத்துக் கொள்ளவேண்டும். குறைந்தது வீண் ஆடம்பரங்களைத் தவிர்த்து அத்தகையவர்களை பொறாமை கொள்ளச் செய்யாமலாவது நடந்து கொள்ள வேண்டும்...

அத்தோடு, அடுத்தவர்கள் செய்வதை எல்லாம் - அவை எமது சக்திக்கு அப்பாற்பட்டவையாக இருந்தாலும் - நாமும் செய்ய வேண்டும். என்ற எண்ணம் எம்மில் பலரை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. பிழையான இவ்வெண்ணத்தின் விளைவாக நாம் கடனிலும் வட்டியிலும் வீழ்ந்து வருகின்ற அவலம் தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கிறது. வட்டியின் பாரதூரம் பற்றி, அதன் பொருளாதார விபரீதம் பற்றி 'மிம்பர்' களும் மேடைகளும் எவ்வளவுதான் முழங்கினாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே தொடர்ந்தும் இருக்கின்றது. வங்கிகளின் கறுப்புக் கண்ணாடிகளுக்குள் எமது பெண்கள் நிற்கும் அவலம் தொடர்கிறது. இது குறித்து நாம் உணர்ச்சிபூர்வமாக சிந்திக்க வேண்டும். இறை கோபத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் எம்மை விடுவித்துக் கொள்ள உடன் முன்வர வேண்டும். இத்திருநாள் அதற்கான துவக்கமாக இருக்கட்டும். எமது இயலுமைக்கும், வருமானத்திற்கும் உட்பட்ட வகையில் எமது செலவுகளை அமைத்துக் கொள்வோம். அனுமதிக்கப்பட்டவைகளையே தவிர்த்து "ரமழானில்" பெற்ற பயிற்சி இதற்கான உறுதியை எம்மில் ஏற்படுத்தட்டும். அதே போல் நியாயமான தேவைகளுக்காக கடன் வழங்குகின்ற நிறுவனங்களை, ஒழுங்குகளை எமது பைத்துஸ்ஸாகாத்தும், பைத்துல்மாலும் விரைந்து ஏற்படுத்துவது பற்றி விரைவாக சிந்திக்கட்டும்...

அடுத்து இந்த மகிழ்ச்சியான திருநாளை எப்படிக் கொண்டாடுவது? என்பது பற்றியும் நாம் ஆக்கபூர்வமாகச் சிந்திக்க வேண்டும். மகிழ்ச்சியை வெளிப்படுத்தவும் உடலுக்கும் உள்ளத்திற்கும் புத்துணர்ச்சி அளிக்கவும் எமது மார்க்கம் காட்டித் தந்த வழிமுறைகளை மாத்திரம் பின்பற்றுவோம். உறவினர், நண்பர்களை தரிசித்தல், எம்மை விட்டும் பிரிந்தவர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்காகப் பிரார்த்தித்தல், விளையாட்டுப் போட்டிகளை, கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்து சிறார்களையும், பெரியவர்களையும் மகிழ்வித்தல் போன்ற காரியங்களை திட்டமிட்டு, ஒழுங்கமைத்து நடத்த வேண்டும். இவ்வாறான நல்ல திட்டங்கள், ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினால் தான் எமது இளைஞர்கள் தவறான வழிகளை நாடுகின்றனர் என்பதனை நாம் கவனத்திலெடுக்க வேண்டும். சுற்றுலாக்கள், திரைப்படங்கள் பார்க்கச் செல்லுதல், வானொலி, தொலைக்காட்சிகளின் பிழையான நிகழ்ச்சிகளில் ஈடுபாடு காட்டல் போன்றவற்றிலும் குழுக்களாகச் சென்று மது அருந்துவதிலும் ஈடுபடுகின்றனர். கோஷ்டி மோதல்களும், முறுகல்களும் இதனால் ஏற்படுகின்றன. இவை எம் எல்லோரினதும் மகிழ்ச்சியைக் குலைக்கச் செய்யும் விடயங்களாகும். எனவே, இது குறித்தும் சிந்திப்போம். இவ்வாறான நல்ல சிந்தனைகளோடு இத்திருநாளை எல்லோரும் கொண்டாடுவோம். உங்கள் அனைவருக்கும் ஈகை நல் வாழ்த்துக்கள்!

மீண்டும் மறு இதழில் சந்திக்கும் வரை...

அன்புடன்,
ஆசிரியர் பீடம்

Letter to the Editor

# OVERCROWDED PRISON
## A WASTE OF COUNTRY'S RESOURCES

**Recently** it was reported that the prison's chief had said that while the prisons of the country could accommodate only about 10,000 prisoners, at present they hold some 29,000, and that to reduce congestion the department is planning to have more open prisons.

What a waste of resources. We have been visiting the Welikada prisons ladies' section and we have found quite a few of them had been imprisoned for minor offences such as inability to pay some debts or on suspicion of loitering. The amount of payment required to free them is often a few thousands of rupees. Due to the inability to pay this, they are being kept in the prison often for years and the government pays thousands and thousands of rupees feeding, clothing and providing medicine etc., for them. Some of them have even delivered their children and the children too are growing among the criminals.

Specially considering the overcrowding in addition to the expenditure, it would be much more prudent to warn those who had been imprisoned for minor offences and let them free. This will also relieve a lot of heartaches in these people's families where the spouse and the children suffer due to the absence of the mother/father.

It will also be more effective to punish someone for minor offences by making them do some labour which could profit the prison department. We in our country have been following such ancient stupid practices without considering reenacting new laws which will not only overcome the problems such as overcrowding but also be more effective, more productive and more beneficial to the society and less destructive to the families. Hope the judges will remember the overcrowding aspect when they issue punishments for offenders of law.

**Dr. Mrs. Mareena Thaha Reffai**

# AL-RAZI (RAZES)
## 841-926 A.D.

**His** full name is Abu-Bakr Mohammaed Ibn-Zakaria Al-Razi, known to the Western World as Razes. He was born in Ray, a suburb of Tehran, the capital of modern Persia (Profile of Iran 1977, Sarton 1950). He first studied music which was his main interest in his early life. He was a skillful player on the lute. He then studied philosophy, and later medicine. But he was a better physician than a philosopher, He first became the Court-Physician of Prince Abu Saleh Al-Mansur, the ruler of Khorosan. Then he moved to Baghdad where he became the Chief Physician of the Baghdad Hospital and the Court-Physician of the Caliph. He had a good basis of physics and chemistry as well as medicine.

He published several books which were translated into Latin, French, Italian, Hebrew, and Greek. One of his main books is "Al-Mansuri" (Liber Al-Mansofis) which he dedicated to his patron Prince Al-Mansur. It was composed of ten treatises and included all aspects of health and disease. He defined medicine as "the art concerned in preserving healthy bodies, in combating disease, and in restoring health to the sick." He thus showed the three aspects of medicine namely, public health, preventive medicine, and treatment of specific diseases. he listed seven principles for the preservation of health:

1. Moderation and balance in motion and rest.
2. Moderation in eating and drinking.
3. Elimination of superfluities.
4. Improvement and regulation of dwelling places.
5. Avoidance of excessive evil happenings before they become uncontrollable.
6. Maintenance of harmony in ambitions and resolutions.
7. Acquisition of reticence through possession of good habits including exercise.

He also published another book called "Al-Murshid". In it, he emphasized the important lines of therapy that we mentioned earlier. He described the different types of fever including continuous, relapsing, and hectic. He stated that fever can be a symptom of a disease or a disease in itself. He introduced mercury as a therapeutic drug for the first time in history, which was later adopted in Europe. He realized that a man normally does not want to get sick, and he wants to recover as soon as possible. However, if a patient does not have the will or the desire to get well, the physician's hands are tied and cannot help him. He stressed the continued medical education of the physician. He advised him to record his own observations. He encouraged him to meet with other physicians to discuss medical problems. He recommended that the physicians should try solving these problems rather than depending on others for finding solutions.

Another book written by Al-Razi was named "Al-Hawi", which means the complete text. It was composed of 22 volumes. It was one of the main text books in the medical school in Paris, especially its 9th volume on pharmacology.

He wrote a treatise on measles and smallpox called "de Peste or de Pestilentia" which was translated to Latin in 1565 A.D. It is a masterpiece in clinical medicine (Browne 1962). It describes the clinical difference between the two diseases so vividly that nothing since has been added (Keys 1971).

**Source (Through Website)**
Dept of Medicine & Surgery (In the Muslims' History)
School of Islamic Science, Technology & Historical Development
Islamic Think Tank – Sri Lanka
Send your comments to: istntksl@googlemail.com

**ஒரு சிந்தனை**

அறிந்து கொள்வது போதாது, அதை செயல்படுத்த வேண்டும்.
ஆசைப்படுவது போதாது, அதை கண்டிப்பாக அடைந்து கொள்ள வேண்டும்.

ஜொனதன் வுல்ப்கெங்க் வொன் கோதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Young ACHIEVERS

எமது மண்ணின் இளம் சாதனையாளர்களில் ஒருவர்...



**பெயர்**

MOHAMED NIZAR
MOHAMED IMRAN

**தொழில்**

Undergraduate Student of UNIVERSITY OF SRI JAYEWARDENEPURA

**வாழ்வின் குறிக்கோள்**

சமூக முன்னேற்ற செயற்பாடுகளுக்கு முடியுமான வழிகளில் முன்னின்று செயலாற்றுதலும் ஒத்துழைப்பு வழங்குதலும்.

Actively participating and Helping the society in as many as possible ways for the well - being of the society

**கல்விச் சாதனைகள்**

க.பொ.த உயர்தரத்தில் சகல பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி பெற்று ஜயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்குத் தெரிவு.

G.C.E Advanced level with 3A passes in commerce stream and currently reading for Management Degree at university of Sri Jayewardenepura, Colombo. (Completing the degree in 2011).

தற்போது CIMA தகைமைக்கான இறுதிப் பகுதியில் கற்றுக் கொண்டிருப்பதுடன், கடந்த 2008 மே மாதம் நடைபெற்ற நிதி முகாமைத்துவம் (FINANCIAL ANALYSIS) பகுதியில் இலங்கையில் முதலாமிடம், **உலகளாவிய ரீதியில் ஐந்தாமிடம்** பெற்றமை குறிப்பிடத்தக்கது.

Currently studying for Strategic level examinations in "CIMA" qualification. Obtained the highest marks (82 Marks) for Financial Analysis (FA) in Sri Lanka at the May 2008 examination and ranked **FIFTH (5) IN THE WORLD**. (FA is a subject in CIMA managerial level)

**எதிர்கால இலக்கு**

2013ல் வியாபார முகாமைத்துவக் கற்கை நெறியில் முதுமானிப் பட்டம் பெறுதல், எனது துறையில் அதி உயர் நிலையை அடைதல்.

**சமூகத்திற்குக குறிப்பிட விரும்புவது**

அக்குறணை அஸ்ஹர் கல்லூரியில் கற்ற நான் இன்று உலகளாவிய ரீதியில் நடைபெற்ற பரீட்சையில் ஐந்தாம் இடத்தினை பெற முடிந்ததென்றால், இதற்கு பிரதான காரணம் அல்லாஹ்வின் அருளும், எனது விடாமுயற்சியுமாகும்.

எனவே தங்களது விடாமுயற்சியினால் இதைவிட பாரிய வெற்றிகளை நிச்சயமாக அடைய முடியும் என்பதனை மாணவ சமூகத்திற்குக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

வாசகர்களிடமிருந்து தரமான ஆக்கங்களையும், விமர்சனங்களையும் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம்...

\- ஆசிரியர் பீடம் -

# GUIDE TO PUBLIC SERVICE

மக்களுக்கான சில வழிகாட்டல்கள்...

## பிரதேச செயலகத்தின் பணிகள்

தொடர் - 02

### பிறப்பு, விவாகம் மற்றும் மரணச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளல்

பிறப்பு, விவாகம் அல்லது மரணம் நிகழ்ந்த இடத்திற்குரிய பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பித்து சான்றிதழ்களின் பிரதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

**முத்திரை கட்டண விபரம்.**

பதிவு இலக்கம் மற்றும் திகதி தெரிந்திருந்தால் பிரதியொன்றுக்கு ரூ.25.00 பெறுமதியான முத்திரை.

பதிவு இலக்கம் மற்றும் திகதி தெரியாதவிடத்து பிரதியொன்றுக்கு ரூ.50.00 பெறுமதியான முத்திரை.

பிறப்பு, விவாகம் அல்லது மரணம் நிகழ்ந்த வருடத்தை மாத்திரம் தெரிந்திருந்தால் ரூ.100.00 பெறுமதியான முத்திரை.

**பிறப்பை பதிவு செய்தல்**

பிறப்பை 03 மாதத்தினுள் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

**தேவையான ஆவணங்கள்**

- வைத்தியசாலையின் பிறப்பு தொடர்பிலான அறிக்கை
- கிராமசேவை அதிகாரியின் அறிக்கை.
- தோட்டப்புற பிறப்பு அறிக்கை.

பிறப்பு நிகழ்ந்த பிரதேசத்திற்குரிய பதிவாளரிடம் பிறப்பை பதிவு செய்து கொள்ளலாம்.

பெற்றோர்களின் பெயர்களில் மாற்றம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பிறப்புச் சான்றிதழில் திருத்தங்களை மேற்கொள்ளல்.

**தேவைப்படும் ஆவணங்கள்.**

- பெற்றோரின் விவாகச்சான்றிதழ்
- பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்
- அடையாள அட்டை

தந்தையின் தகவல்களில் மாற்றங்களை செய்வதற்கு பிரிவு 27(1) இன் கீழ் அறிவித்தல் பத்திரமொன்றும் தாயின் தகவல்களில் மாற்றங்களை செய்வதற்கு பிரிவு 51(1) இன் கீழ் அறிவித்தல் பத்திரமொன்றுடன் மேற்குறிப்பிட்டுள்ள ஆவணங்களுடன் மேலதிக மாவட்ட பதிவாளரின் சிபாரிசுடன் வலயத்திற்கு பொறுப்பான பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பி திருத்தங்களை செய்து கொள்ளலாம்.

## உடனடி தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய Quantity Surveying (QS) பாடநெறி

கணிம அளவீடு என தமிழில் அழைக்கப்படுகின்ற (Quantity Surveying) பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான (Quantity Surveyors) கிராக்கி உலகம் முழுவதும் அதிகரித்துக் காணப்படுகின்றது. கட்டுமானத்துறையில் மாத்திரமின்றி பல துறைகளில் இவர்களது சேவை தேவைப்படுகின்றது. உதாரணமாக, கட்டுமானமொன்றின் செலவின மதிப்பீடு (Cost Estimation), செலவீன எதிர்வுகூறல் (Cost forcasting), திட்டங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கல் (Contractual Advice), செலவினத்தைக் கட்டுப்படுத்தல் (Cost Control), நிதிப் பராமரிப்பு (Financial Management) போன்றன இவர்களது சேவைகளில் சிலவாகும். ஆனால் இலங்கையைப் பொறுத்தளவில் இத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளக் கூடிய சாத்தியம் மிக அரிதாகவே உள்ளது. இலங்கையில் மொறட்டுவ பல்கலைக்கழகம் வருடாந்தம் 50 மாணவர்களுக்கு மாத்திரம் இத்துறையில் கற்பதற்கு அனுமதி வழங்குகின்றது. ஆனால் தற்போது ஓரிரு தனியார் நிறுவனங்கள் இக்கற்கை நெறியினை அறிமுகப்படுத்தி, பிரித்தானியாவின் EDEXCEL நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழினை வழங்கி வருகின்றனர். இதில் இலங்கையில் British College of Applied Studies (BCAS) நிறுவனம் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இந்நிறுவனம் தொழில் வசதிகளையும் ஏற்பாடு செய்து கொடுப்பது விசேட அம்சமாகும்.

இப்பாடநெறி 18 மாதங்களைக் கொண்ட முழுநேரப் பாடநெறியாகும். இலங்கையில் 18 மாதங்கள் கற்று BTEC HND in QS தாரதரத்தையும் பின்னர் ஒரு வருடம் UK பல்கலைக்கழகமொன்றில் கற்று B.Sc (Hons) in QS தராதரத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AKURANA BAITHUL MAAL
ABM

# அக்குறணை பைதுல்மால்

## ஓர் அறிமுகம்...

ஒரு ஊரின் முன்னேற்றத்தில் மிகவும் முக்கியமான ஒரு பகுதி பைதுல்மால் நிதியமாகும். ஆனால் இன்று அதிகமான ஊர்களில் இவ்விடயம் முன்னெடுக்கப்படாது காணப்படுகின்றமை துரதிஷ்டவசமாகும். பைதுல்மால் நிதியத்தின் ஆரம்பம். அப்பிரதேசத்தில் அதிகரித்துக் காணப்படுகின்ற வட்டி, லஞ்சம், மோசடிகள் போன்ற சமூக விரோத செயல்களை இல்லாதொழிக்கவும், இஸ்லாமிய பொருளாதாரத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்பவும் உதவியாக இருக்கும். இதன் அடிப்படையில் அக்குறணை பிரதேச மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, அண்மையில் அஸ்னா மத்திய பள்ளியின் ஏற்பாட்டில் அக்குறணையில் காணப்படுகின்ற சகல மஹல்லாக்களின் ஒத்துழைப்புக்களுடனும், அனுசரணையுடனும் அக்குறணையை மையப்படுத்திய ஓர் பைதுல்மால் நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

### இதன் சிறப்புக்கள்...

- ஸதகதுல் ஜாரியாவான நற்கருமங்களுக்கு செலவு செய்வதன் சிறப்புக்கள் பற்றி அல்லாஹ் புனித திருக்குர்ஆனில் "அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்பவர்களுக்கு உதாரணம் ஒரு வித்திலிருந்து ஏழு கதிர்கள் முளைத்து ஒவ்வொரு கதிரிலும் நூறு வித்துக்கள் இருக்கக் கூடிய ஒரு வித்துக்கு ஒப்பானதாகும்" அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு எழுநூறு மடங்காக அதிகரித்துக் கொடுப்பான்.
- ஸதகாக்கள் முறையாகக் கொடுக்கப்படும் போது பிரயாணங்களின் போது ஏற்படக் கூடிய ஆபத்துக்கள், நோய்கள், கெட்ட மரணம், தீ விபத்துக்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கக் காரணமாக அமைகின்றது.
- கடன் திட்டம் இதன் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். இதன் சிறப்பு பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள். ஒரு மனிதனுக்கு இனாமாக ஒரு உதவியைச் செய்தால் அதற்கு 10 மடங்கு நன்மைகள் என்றால், கடனாக கொடுக்கும் போது 18 மடங்கு நன்மை கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே உங்களுடைய உதவிகளின் மூலமாக கொடுக்கக் கூடிய கடன் திட்டத்தின் மூலம் அதனுடைய நன்மைகள் கிடைத்துக் கொண்டே இருக்கும்" என நவின்றார்கள்.

### ஒரு ஊரில் பைதுல்மாலின் அவசியம்...

- இது செல்வந்தர்களின் செல்வங்கள் நல்ல வழியில் பிரயோசனமான முறையில் செலவிடுவதற்கு காரணமாக அமையும்.
- ஏழைகளின் தேவைகளை ஹலாலான வழிகளில் நிறை வேற்றிக் கொள்வதற்கு உதவியாக இருக்கும்.
- செல்வந்தர்களில் அதிகமானவர்களுடைய நேரங்கள், முயற்சிகள் தமது சொத்துக்களை பெருக்குவதிலும், பாதுகாப்பதிலும் செலவழிக்கின்றனர். இது இயல்பான ஒன்றாகும், மாறாக பிழையான விடயமல்ல. இவர்களை நற்காரியங்களுக்குத் தூண்டக் கூடியதாகவும், அவர்கள் விரும்பக்கூடிய நற்காரியங்களுக்கு செலவு செய்தற்கான களமாகவும் பைத்துல்மால் காணப்படுகிறது.
- செல்வந்தர்கள் தமது செல்வங்களை நற்காரியங்களுக்கு செலவு செய்யும் போது ஏமாற்றப்படாமல் இருப்பதற்கு, உண்மையான தேவையானவர்களை இனங்கண்டு உதவி செய்வதற்கு பங்களித்தல்.
- சமூகத்தில் ஏற்படக்கூடிய விபத்துக்கள், அழிவுகளுக்கு திடீரென வசூல் செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் உதவி புரிதல்.
- சில சந்தர்ப்பங்களில் தனவந்தர்கள் ஒரு குறிப்பிட்ட விடயத்திற்கு மாத்திரம் செலவழிக்க விரும்புவர். இப்படியான தனவந்தர்களின் எண்ணங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

இது எவ்வாறு சமூகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப் போகின்றது...

### 01. கடன் திட்டம்

- வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு செல்லக் கூடியவர்களுக்கு உதவுதல்.
- சிறு முதலீட்டு வியாபாரம் செய்யக் கூடியவர்களுக்கு உதவுதல்.
- அடிப்படை வீட்டுத் தேவைகளுக்கு உதவுதல்.
- ஷரீஆவின் அடிப்படையில் நடக்கக் கூடிய திருமணங்களுக்கு உதவுதல்.

### 02. கல்வி விடயங்கள்.

- மத்ரஸாக்கள், பாடசாலைகளில் கல்வி கற்கக் கூடிய மாணவர்களில் ஏழைகள், அனாதைகள், அகதிகள் போன்றவர்களில் திறமையானவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குதல்.
- உயர் துறைகளில் கற்கும் மாணவர்களுக்கு மாதாந்தக் கடன் வழங்குதல், படித்து முடித்து உழைக்கும் காலத்தில் இல்கு தவணை அடிப்படையில் பைதுல் மாலுக்கு திருப்பிச் செலுத்துதல்.
- க.பொ.த. சாதாரண, உயர் தர பரீட்சைக்குத் தோற்றக் கூடியவர்களுக்கு முன்னோடிப் பரீட்சைகளை நடாத்தி மிகத் திறமையான மாணவர்களுக்கு மாதாந்த உதவித் தொகை வழங்குதல்.
- தேவையேற்படும் போது மாணவர்களுக்கு கருத்தரங்குகளையும், வகுப்புக்களையும் நடாத்துதல்.
- குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அறிவுரைகள், பயான் நிகழ்ச்சிகள் மற்றும் வழிகாட்டல்களை ஏற்பாடு செய்தல்.
- ஏழை, அகதி, அனாதை மாணவர்களுக்கு உபகரணங்கள், காகிதாதிகள், காலணிகள் போன்றவைகளை வழங்குதல்.

### 03. பொதுவான உதவிகள்

- சமூகத்திலுள்ள வயது முதிர்ந்தவர்கள், நீண்டகால நோயாளிகள் போன்றவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகளை வழங்குதல்.
- இஸ்லாமிய நகை ஈட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.
- வெள்ள அனர்த்தம், மண்சரிவு, சூறாவளி போன்ற அனர்த்தங்களின் போது முடியுமான உதவிகளை வழங்குதல்.
- கலாசார சீரழிவிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

பொது மக்களின் ஒத்துழைப்புக்கள் பின்வரும் வகைகளில் எதிர்பார்க்கப்படுகின்றன.

- செல்வந்தர்கள் தமது சொத்தில் ஒரு பகுதியை பைதுல் மாலிற்கு வழங்குதல். (இது 10/= ரூபாவிலிருந்து மில்லியன் கணக்கிலும் அமையலாம்)
- மாதாந்தம் ஒரு சந்தாவை வழங்குதல். கடை வியாபாரிகள், தொழிற்சாலை உரிமையாளர்கள் தமது வியாபாரத்தில் ஒரு பங்காளியாக அல்லது சம்பளம் பெறக்கூடிய ஒரு தொழிலாளியாக பைதுல் மாலைக் கருதி ஒரு நியாயமான தொகையை பைதுல்மால் நிதியத்திற்கு மாதாந்த சந்தாவாக வழங்க முடியும்.
- பைதுல்மாலினூடாக வழங்கப்படுகின்ற உண்டியல்களில் ஒவ்வொரு நாளும் ஸதகாவாக ஒரு தொகையை சேமிக்க முடியும்.
- வசதி படைத்தவர்கள் இதற்கு நீண்டகால கடன் கொடுத்து உதவிசெய்ய முடியும்.
- வெளிநாடுகளில் வசிக்கக் கூடியவர்கள் தொழில் புரியக் கூடியவர்கள் தமது வருவாயில் ஒரு பகுதியை பைதுல் மாலுக்கு வழங்க முடியும்.
- பள்ளிவாயல்கள், மத்ரஸாக்கள் போன்றவற்றிற்கு தமது சொத்துக்களை வக்ப் செய்வதைப் போன்று இதற்கும் வக்ப் செய்வதன் மூலம் உதவ முடியும்.

அக்குறணை பைதுல் மாலின் வளர்ச்சிக்கு அனைவரினதும் மேலான ஒத்துழைப்புக்களை எதிர்பார்க்கின்றோம்.

பைதுல் மால்
அஸ்னா மத்திய பள்ளி
அக்குறணை.

### அக்குறணை பைதுல்மால் செயற் குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| தலைவர் | அல்ஹாஜ் S.H.M. இஸ்ஸடீன் |
| உப தலைவர் | மௌலவி N.S.M. கஸ்ஸாலி |
| செயலாளர் | அல்ஹாஜ் B.A.C.M. ரமீம் |
| உப செயலாளர் | அல்ஹாஜ் S.H. சிப்லி |
| பொருளாளர் | அல்ஹாஜ் M.I.M. பாஹிம் |
| உதவிப் பொருளாளர் | அல்ஹாஜ் A.C.M. ஹில்மி |

**குழு அங்கத்தவர்கள்**

அல்ஹாஜ் S.M.M. மஹ்ருப்,
அல்ஹாஜ் நஜா யஹ்யா,
மௌலவி M.J.M. அஜ்வாத்,
மௌலவி S.A.M. முஸ்ஸம்மில்,
மௌலவி A.G. அப்துல் லத்தீப்,
மௌலவி S.S.H. பஹ்மி,
அல்ஹாஜ் N.M.A. ஹமீத்,
மௌலவி H.M. மபாஸ் (முப்தி),
அல்ஹாஜ் A.C.A. ஸுபைர்,
அல்ஹாஜ் அஸ்மி பாருக் (LLB)
அல்ஹாஜ் Z.A.M. முபீத்,
அல்ஹாஜ் M.A.M. வஸீர்,
அல்ஹாஜ் M.J.H முஹம்மத்,
அல்ஹாஜ் A.M.M. நவாஸ்,
அல்ஹாஜ் J.M. ரியால்,
அல்ஹாஜ் M.S.A. மவ்ஜூத்,
அல்ஹாஜ் A.W.M ஸரூஜ்,
அல்ஹாஜ் U.M. ஹஸன்,
அல்ஹாஜ் A.C.M ரியால்,
அல்ஹாஜ் M.H.M. பஸ்லுல் ஹக்,
அல்ஹாஜ் M.H.M புஹாரி (Eng)

## அக்குறணை ஒரு கண்ணோட்டம்

தொடர் 03




**கஸாவத்தை - 560**

| | | | |
|---|---|---|---|
| பரப்பளவு | : | 0.74 Sq Km | |
| மொத்த சனத்தொகை | : | 2879 | |
| ஆண்கள் | : | 1384 | 48% |
| பெண்கள் | : | 1495 | 52% |
| முஸ்லிம்கள் | : | 2704 | |
| இந்துக்கள் | : | 150 | |
| பௌதர்கள் | : | 25 | |
| பாடசாலை | : | 01 | |
| முன்பள்ளி | : | 01 | |
| பள்ளி வாயல்கள் | : | 04 | |
| மொத்த வீடுகள் | : | 258 | |
| வீடு இல்லாத குடும்பங்கள் | : | 9 2 | |
| தொழில் புரிவோர் | : | 250 | |
| தொழில் இல்லாதோர் | : | 325 | |

**வயதடிப்படையில் (சனத்தொகை)**

| | | | |
|---|---|---|---|
| வயது | 00 – 05 | 324 | 11.26% |
| " | 06 – 18 | 682 | 23.69% |
| " | 19 – 60 | 1617 | 56.16% |
| " | 60க்கு மேல் | 256 | 8.89% |

**கல்வித்தரம்**

| | பெண்கள் | ஆண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| தரம் 01 – 05 | 550 | 602 | 1152 |
| தரம் 06 – 10 | 568 | 584 | 1152 |
| க.பொ.த (சா/த) | 70 | 121 | 191 |
| க.பொ.த (உ/த) | 08 | 07 | 15 |
| பாடசாலைக்கு செல்லாதவர்கள் (ஐந்து வயதிற்குக் கீழ்) | 158 | 166 | 324 |
| பாடசாலைக் கல்வியை மேற்கொள்ளாதவர்கள் | 30 | 15 | 45 |

மூலம்: பிரதேச செயலகம், அக்குறணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Health View

**கேள்வி - பதில்**

**நீரிழிவு நோயால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி சென்ற முறை விரிவாக விளக்கியிருந்தீர்கள். இப்பாதிப்புகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமாயின் நோயாளிகள் என்ன செய்ய வேண்டும்?**

இங்கு மிக மிக முக்கியமான விடயம் குருதியில் உள்ள குளுக்கோஸின் (சீனியின்) அளவைக் கட்டுப்படுத்தி வைத்திருத்தல் ஆகும். இது வாழ் நாள் முழுவதும் கவனமாக செய்ய வேண்டிய வேலையாகும். குளுக்கோஸின் அளவை ஒரு சாதாரண மனிதரின் உடம்பில் இருக்க வேண்டிய அளவுக்கு வைத்துக் கொள்ள முடியுமாயின் நோயின் சிக்கல்களை பெரும்பாலும் தவிர்த்துக் கொள்ளலாம். ஆனால் பெரும்பாலான நோயாளிகள் சீனியின் அளவு கொஞ்சம் குறையும் போது மருந்தைக் குறைத்து விடுவார்கள் அல்லது விட்டுவிடுவார்கள். குருதியில் சீனியின் அளவு 100mg இருந்தாலும் நாம் மருந்துகளைக் குறைப்பது சரியானதல்ல. இவ்வாறு செய்தோமானால் திடீரென சீனியின் அளவு கூடிவிடும்.

குருதியில் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்படுத்துவதோடு நின்று விடாமல் நாம் இன்னும் சில விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

1) **குருதியமுக்கத்தை கட்டுப்படுத்தல்:** நீரிழிவு நோயாளிகளின் குருதியமுக்கம் சிறிதளவு கூடினாலும் பெரிய பாதிப்பு ஏற்படும். குருதியமுக்கம் 140/90 அல்லது அதற்கு மேற்பட்டு இருப்பின் கட்டாயமாக அதற்கான மருந்துகளை தொடர்ச்சியாகப் பாவிக்க வேண்டும். இல்லாவிடின் சில வருடங்கள் செல்லும் போது மாரடைப்பு, பக்கவாதம் (பாரிசவாதம் - STROKE), சிறுநீரக நோய் போன்றவை உண்டாகலாம்.

2) **கொலஸ்ட்ரோல்:** நீரிழிவு நோயாளிகளின் கொலஸ்ட்ரோலின் அளவு, நீரிழிவு நோய் அற்றவர்களின் அளவை விட மிகக் குறைவாக இருக்க வேண்டும். பொதுவாக கொலஸ்ட்ரோல் ரிப்போட்களில் வெவ்வேறு அளவுகளைப் போட்டிருப்பார்கள். இவை பொதுவாக பிழையானவை. நீரிழிவு நோயாளியின் மொத்தக் கொலஸ்ட்ரோல் (TOTAL CHOLESTE ROL) 180mg ldl க்குக் கீழும், LDL கொலஸ்ட்ரோல் 85mg ldl க்குக் கீழும் காணப்பட வேண்டும். இதற்கு மேல் இருப்பின் மாரடைப்பு ஏற்படக்கூடிய சாத்தியக் கூறு பல மடங்கால் அதிகரிக்கும்.

3) உடற்பருமன் குறைந்து மெலிந்தவர்களாக மாற வேண்டும்.

4) வருடத்துக்கு ஒரு முறையாவது பின்வரும் பரிசோதனைகளைச் செய்து கொள்ள வேண்டும்.

- **சிறுநீரகம் தொடர்பான பரிசோதனைகள்:** விஷேடமாக MICROALBUMIN எனப்படும் சிறுநீர்ப் பரிசோதனை முக்கியமானது இப்பரிசோதனை பிந்திய காலத்தில் ஏற்படக் கூடிய சிறுநீரகப் பிரச்சினைகளை முன் கூட்டியே காட்டக்கூடியது. அவ்வாறான மாற்றங்கள் இருப்பின் நாம் சில மருந்துகளை (Eg: Enalapril, Captopril, Losartan) பாவிப்பதன் மூலம் பிற்காலத்தில் ஏற்படக்கூடிய சிறுநீரகப் பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளலாம்.
- **கண் பரிசோதனை:** கண்களை ஒரு கண் வைத்திய நிபுணர் அல்லது நீரிழிவு நோய் நிபுணர் மூலம் பரிசோதனை செய்வதன் மூலம் எதிர் காலத்தில் வரக் கூடிய பிரச்சினைகளை கண்டறிந்து மருத்துவம் செய்யலாம்.
- வருடத்திற்கு ஒரு முறையாவது கொலஸ்ட்ரோல் பரிசோதனையும், ஈ.ஸீ.ஜி (ECG) பரிசோதனையும் செய்து கொள்வது நல்லது.
- **HbA1c:** இப்பரிசோதனை எமது குருதியில் கடந்த மூன்று மாதங்களில் இருந்த சராசரி குளுக்கோஸின் அளவைக் காட்டும். வருடத்துக்கு ஒரு முறை இப்பரிசோதனையைச் செய்வதன் மூலம் நீரிழிவு நோய் சரியான முறையில் கட்டுப்பாட்டில் உள்ளதா என்பதை மிகத் துல்லியமாக அறிந்து கொள்ளலாம்.

**நீரிழிவு சிறந்த கட்டுப்பாட்டில் உள்ளதா என்பதை எவ்வாறு நாம் அறிந்து கொள்ளலாம்?**

நாம் அடிக்கடி குருதியில் குளுக்கோஸின் அளவைப் பரிசோதிக்க வேண்டும். கிழமைக்கு ஓரிரு முறையாவது பரிசோதிப்பது நல்லது.

- எட்டு முதல் பன்னிரெண்டு மணிநேரம் சாப்பிடாமல் இருந்து பரிசோதித்தால் 90mg ldl -126mg ldl வரை இருக்க வேண்டும்
- சாப்பாட்டிற்கு 2 மணித்தியாலத்திற்கு முன்னர் அல்லது பிந்திப்பார்த்தால் 90mg ldl முதல் 140mg ldl வரை இருக்க வேண்டும். எனினும் 65 வயதுக்கு மேற்பட்டோரில் இந்த அளவுகள் கொஞ்சம் கூடுதலாக இருந்தாலும் பரவாயில்லை (Eg: 140 – 180).



**Dr. கமால் ஏ. நாஸர்**
MBBS, MD, PGA (UK), MRCP(UK), MRCPS (Glasg)
Consultant Physician

நான் முன்பு கூறியவாறு HbA1c எனும் பரிசோதனையை செய்வதன் மூலம், நீரிழிவு நோய் சிறந்த கட்டுப்பாட்டில் உள்ளதா என்பதை சரியான முறையில் சொல்லலாம். ஏனெனில், குருதியில் உள்ள குளுகோஸின் அளவு நிமிடத்துக்கு நிமிடம் மாறக் கூடியது. எனவே HbA1c, குருதியில் குளுக்கோஸின் அளவை சராசரிப் பிரமாணமாகத் தரும்.

> - **ஆரம்பத்திலிருந்தே நீரிழிவு நோயை மிகவும் துள்ளியமாகக் கட்டுப்படுத்துவதன் மூலமே, பிற்காலத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ளலாம், என்பதை ஆராய்ச்சிகள் தெளிவாகக் காட்டியுள்ளன.**
> - **நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின், உடற்பருமனைக் குறைப்பது மிக மிக முக்கியமானதாகும்.**
> - **தொடர்ச்சியாக மருந்துகளைப் பாவிப்பதும், அடிக்கடி குருதிப் பரிசோதனைகளை செய்து பார்த்துக் கொள்வதும் சிறந்த நோய்க் கட்டுப்பாட்டுக்கு மிக முக்கியமாகும்.**

**நாம் இரத்தப் பரிசோதனை செய்வதற்கு சாப்பிடாமல் இருக்க வேண்டிய நேரங்களைப் பற்றிக் கூற முடியுமா?**

1) இரத்தத்தில் குளுக்கோஸ் பரிசோதனை (FASTING GULUCOSE – FBS) செய்வதாயின் 8 மணித்தியாலம் முதல் 12 மணித்தியாலம் வரை சாப்பிடாமல் இருக்க வேண்டும்.

2) கொலஸ்ட்ரோல் பரிசோதனைக்கு 12 – 14 மணித்தியாலங்கள் சாப்பிடாமல் இருக்க வேண்டும்.

ஆனால் தண்ணீர் குடிப்பதால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

**குருதியில் குளுக்கோஸின் அளவை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?**

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த நாம் மூன்று வழிகளை கடைபிடிப்போம்.

- **உணவுக்கட்டுப்பாடு:** இது பற்றி விரிவாகக் கூற வேண்டியிருப்பதால் வேறொரு அத்தியாயத்தில் ஆராயலாம்.
- உடற்பயிற்சி அல்லது உடம்புக்குத் தேவையான வேலை கொடுத்தல்.
- **மருந்து வகைகள்:** இதில் மாத்திரைகளும், இன்சுலின் ஊசியும் அடங்கும்.

நாம் முதலில் உடற் பயிற்சி பற்றி சில விடயங்களை ஆராய்வோம். மனிதன் உட்பட எல்லா மிருக இனங்களும் ஓடி ஆடி வேலை செய்வதற்கு ஏற்றவாறே படைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நாம் இன்று முடிந்தளவு சாப்பிட்டு விட்டு சொகுசாக, உடம்பை வருத்தாது வாழ முயற்சிக்கின்றோம். இதுவே பெரும்பாலான நோய்களுக்கு மூல காரணியாகும். நீரிழிவு நோய் ஏற்பட்ட பின்னராவது நாம் நன்கு வேலை செய்து உடம்பைத் திடகாத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும். உடலை வருத்தி வேலை செய்வதன் மூலமாக குருதியில் உள்ள குளுகோஸ் எமது சக்தித் தேவைக்குப் பயன் படுத்தப்படும். இதனால் குருதியில் குளுகோஸின் அளவு குறைந்து நீரிழிவு நோய் கட்டுப்பாட்டுக்கு வரும். குறைந்தது ஒரு நாளைக்கு அரை மணித்தியாலமாவது வேகமாக வேலை செய்வது, ஓடுவது அல்லது நடப்பது சிறந்தது. ஆனால் இதற்காக நாம் விளையாட்டு மைதானத்துக்கு போய்த்தான் ஓட வேண்டுமென்றோ அல்லது உடற் பயிற்சி இயந்திரங்களை வாங்கி உடற்பயிற்சி செய்ய வேண்டுமென்றோ கட்டாயமில்லை, எமது அன்றாட வேலைகள், சிற்சிறு தோட்ட வேலைகள் என்பவற்றைச் செய்வதே போதுமானது. சிறிய தூரங்களை பஸ்ஸிலோ அல்லது முச்சக்கர (ஆட்டோ) வண்டியிலோ செல்லாது நடந்து செல்வதன் மூலம் மருந்தின்றியே நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம்.

முக்கியமாக எமது பெண்களுக்கு எவ்விதமான பாரமான வேலையும் இல்லாத காரணத்தினால் இன்று இந்நிலைமை தோன்றி விட்டது. எமது வீடுகளில் அரிசி இடிப்பதோ, மிளகாய் அரைப்பதோ, விறகு வெட்டுவதோ அல்லது தண்ணீர் கொண்டு வருவதோ காண முடியாத ஒரு விடயமாக மாறிவிட்டது. இதனால் தான் நீரிழிவு, இருதய நோய், உயர் குருதியமுக்கம் மற்றும் மூட்டுவாத நோய்கள் (Eg: OSTEOARTHRITIS) என்பன பெண்கள் மத்தியில் மிகவும் அதிகரித்து வருகின்றது. எனவே பெண்கள் போதியளவு வேலை செய்வது மிக மிக முக்கியமாகும்■

# அற்புதமான மூளை வளர்ச்சி

**(Amazing Brain Development)**

மனிதன் பிறந்தது முதல் அவனுடைய உடலுடன் கூடவே மூளையும் வளர்ச்சியடைகின்றது. அது குழந்தைப் பருவத்திலேயே அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

8 மாதக் குழந்தையின் மூளையில் சுமார் 1000 Trillion நரம்பு இணைப்புகள் ( Nerve Connections) காணப்படுகின்றன. அக் குழந்தை தனது 10 வயதை எட்டும் பொழுது 1000 Trillion ஆக இருந்த நரம்பு இணைப்புகள் 500 Trillion ஆகவோ அல்லது அதைவிடவும் குறைவாகவே காணப்படுகின்றது. ஆரம்பத்தில் ஏற்படும் அனுபவங்கள் மூலம் இந்த நரம்பு இணைப்புக்களின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

ஓர் ஆய்வில், நல்ல முறையில் வளர்க்கப்படாத குழந்தைகளை எடுத்து நோக்கினால் அரிதாகத் தொடர்பாடுதல், செயற்படுதல், அத்துடன் விளையாட்டுப் பொருட்களுடன் குறைவான தொடர்புகளை வைத்திருக்கும் குழந்தைகளின், வயது ஏனைய குழந்தைகளுடன் ஒப்பிடும் பொழுது 20-30% த்திலும் குறைவான மூளை வளர்சியையே கொண்டுள்ளனர்.

குழந்தைகளுக்கு மொழிகளை இயற்கையாகக் கற்றுக்கொள்ள முடியுமா?

வாழ்வில் முதல் 6 மாத காலத்தில் குழந்தைகளின் மழலைப் பேச்சு (Babies Babble) 70 வகையான கூட்டுச்சப்பதங்கள் மூலம் வெளிப்படுகின்றது. அச்சப்தங்கள் உலகத்தில் காணப்படும் அனைத்து மொழிகளிலும் இருந்து உருவாக்கப்படுகின்றன. பின்பு அக்குழந்தைகள் தத்தமது சுற்றுச் சூழலில் பயன்படுத்தப்படும் சப்தங்களையும், சொற்களையும் வைத்து பேசுவதற்கு கற்றுக் கொள்கின்றார்கள். இதன் காரணமாகவே குழந்தையின் முதற் சில வருடங்கள் மொழிகளை கற்பதற்கான சிறந்த காலமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. வியப்பிற்குரிய விடயம் என்னவெனில், குழந்தையின் 8 வயது வரையுள்ள காலப்பிரிவில் 13 மொழிகளைக் கற்றுக் கொள்ளும் ஆற்றல் காணப்படுகின்றது.

**நுண்ணறிவு வளர்ச்சி மட்டம்**

(Intellectual Development)




50% கற்பதற்கான ஆற்றல் வாழ்வில் முதல் 4 வருடத்திற்குள்ளேயே விருத்தியடைகின்றது. இன்னும் 30%மானவை 8 வயதுக்குள்ளும் மிகுதி 20%மானவை 18 வயதுக்குள்ளும் விருத்தியடைகின்றது. இதில் 8 வயதுள்ள காலப் பகுதியிலேயே மிகவும் முக்கியமானது. ஏனெனில், இக் காலப்பகுதியிலேயே வாழ்வில் 80% மான அறிவு வளர்ச்சி வேகம் இடம் பெறுகிறது. திட்டமிட்டு செயற்படுத்தினால் குழந்தைகளை திறமையுள்ளவர்களாக மாற்றிக் கொள்ளலாம்.




"Neuroscientists have now confirmed that the brain's greatest growth spurt draws to a close around the age of ten"

(A Child's Brain – Time Magazine)

**Fazlan Mahsoom**
**Kurugoda**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழில்:
அஷ்ஷெய்க்
B. தாரிக் அலி (நளீமி)
B.A. (Cey), Dip. in Journalism

அரபு மூலம்:
முஹம்மத் நூர் பின்
அப்துல் ஹபீழ் ஸுவைத்

# நபிகளாரின் குழந்தை வளர்ப்பு வழிகாட்டல்கள்

தொடர் - 03

**குழந்தை வளர்ப்பில் பெண்களின் பங்களிப்பு எவ்வாறு பெறப்படல் வேண்டும் என்பது பற்றி தொடர்ந்து நோக்குவோம்...**

பெண் தனது பிள்ளைகளை வளர்த்தெடுப்பதிலும், கணவனுக்கு பணிவிடை செய்வதிலும் ஈடுபடுவதானது அவளை உயர்ந்த அந்தஸ்துக்கு இட்டுச் செல்கின்றது. மகத்தான பெண்களின் வரிசையில் அவளை இணைத்து விடுகிறது. அவளுடைய இந்தச் செயலானது ஆண்கள் ஜிஹாதிலே ஈடுபடுவதற்கும் பள்ளிவாயில்களில் ஜும்ஆ தொழுகைகளில் கலந்து கொள்வதற்கும் நிகரானது. அஸ்மா பின்த் யஸீத் பின் அஸ்ஸகன் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து பின்வருமாறு கூறினார்கள் "நான் முஸ்லிம் பெண்களின் ஒரு குழுவினரின் தூதுவராக உங்களிடம் வந்திருக்கிறேன் அவர்கள் அனைவரதும் கருத்தையே நான் பிரதிபலிக்கின்றேன். அல்லாஹ் உங்களை ஆண்களுக்கும் பெண்களுக்கும் நபியாக அனுப்பினான். எனவேதான் நாங்கள் உங்களை விசுவாசித்து பின்பற்றினோம். பெண்களாகிய நாம் வெளி உலகத்தோடு தொடர்பு அற்றவர்களாக, கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவர்களாக, வீட்டுக்குள் முடங்கிக்கிடக்கின்றோம். ஆண்களோ ஜும்ஆ தொழுகையிலும், ஜனாஸாக்களிலும், ஜிஹாதிலும் கலந்து கொள்ளும் சிறப்பை பெற்றுள்ளனர். அவர்கள் ஜிஹாதுக்காக சென்றுவிட்டால் அவர்களது செல்வங்களை நாம் பாதுகாக்கின்றோம். அவர்களது பிள்ளைகளை வளர்க்கின்றோம். இந்த நன்மைகளில் எங்களுக்கும் பங்கிருக்கிறதா? இறைத்தூதரே...?"

உடனே தனது தோழர்களைப் பார்த்து ரஸூல் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் "இந்தப் பெண் தனது மார்க்கத்தைப் பற்றிக் கேட்ட இந்தக் கேள்வியை விட ஓர் அழகான கூற்றை எந்தப் பெண்ணாவது சொல்ல நீங்கள் கேட்டு இருக்கிறீர்களா?" அப்போது ஸஹாபாக்கள் "உண்மைதான் அல்லாஹ்வின் தூதரே" என்று பதிலளித்தார்கள். அப்போது ரஸூல் (ஸல்) பின்வருமாறு கூறினார்கள். "அஸ்மாவே நீங்கள் திரும்பிச் செல்லுங்கள் உங்களுக்குப் பின்னால் இருக்கும் பெண்களுக்குச் சொல்லுங்கள்: உங்களில் ஒருவர் தங்கள் கணவனுக்கு நல்ல மனைவியாக நடந்து கொள்வதும் அவனது திருப்தியை பெற்றுக் கொள்வதும், அவனோடு கருத்தொற்றுமைப் படுவதும் நீங்கள் குறிப்பிட்ட அனைத்துக்கும் நிகராகிறது." (ஸஹீஹ் முஸ்லிம்)

தனது பிள்ளைக்கு தந்தை ஆற்ற வேண்டிய முதற்கடமை தனக்கு நல்ல மனைவியை தேர்ந்தெடுத்துக் கொள்வதாகும் என அறிஞர் அல்மாவர்தி குறிப்பிடுகின்றார். உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள். தந்தை மகனுக்கு ஆற்ற வேண்டிய முதற்கடமை அவனது தாயை தேர்ந்தெடுப்பதாகும். அவன் புத்திர பாக்கியத்தைத் தேட முன்னர் அழகான, கண்ணியமான, மார்க்கப்பற்றுள்ள, கற்பொழுக்கமுள்ள, தனது விடயங்களில் அறிவுள்ள, திருப்திகரமான பண்புகள் கொண்ட நல்லறிவும், பூரணத்துவமும் உடையவள் என அறியப்பட்ட, தனது கணவனை அவனது பல்வேறு நிலைமைகளின் போதும் மகிழ்விக்கக் கூடிய பெண்ணை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். தனது சிறிய சகோதரிகளையும், எதிர்கால சந்ததிகளையும் நல்ல முறையில் வளர்த்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் ஜாபிர் பின் அப்தில்லா (ரழி) அவர்கள் ஓர் விதவைப் பெண்ணை தனது மனைவியாக தெரிவு செய்து கொண்ட போது அதற்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முழு அங்கீகாரம் வழங்கினார்கள்.

ஸஹீஹான ஹதீஸ்களைக் கொண்ட ஐந்து கிரந்தங்களில் பதிவாகியுள்ள ஒரு நீண்ட ஹதீஸில் ஜாபிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தன்னிடம் "நீர் ஒரு கன்னிப் பெண்ணையா அல்லது விதவையையா மணம் முடித்தீர்?" என்று கேட்டபோது ஒரு விதவையைத்தான் மணமுடித்தேன் என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள். நீர் கொஞ்சி மகிழ ஓர் கன்னிப்பெண்ணை மணமுடித்திருக்கலாமே என்று கூறினார்கள். அப்போது ஜாபிர் (ரழி) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரே எனது தந்தை மரணித்து விட்டார். எனக்கு சிறிய சகோதரிகள் பலர் இருக்கின்றனர். எனவே அவர்களுடைய வயதிலுள்ள ஓர் பெண்ணை மணமுடிக்க நான் விரும்பவில்லை. காரணம் அப்போது அவள் அவர்களுக்கு ஒழுக்கத்தை கற்பிக்கமாட்டாள், அவர்களது விடயங்களை கவனிக்கமாட்டாள் எனவே தான் அவர்களைப் பராமரிக்கவும், அவர்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவுமென ஒரு விதவையைக் கைப்பிடித்தேன் என்றார்கள்.

எனவே, மனைவி தனது கணவனுக்குச் செய்ய வேண்டிய முக்கிய கடமைதான் அவனது பிள்ளைகளை பொறுமையோடும், இரக்கத்தோடும் வளர்த்தெடுப்பது. கணவன் முன்னிலையில் தன் பிள்ளைகள் மீது கோபம் கொள்ளாதிருப்பது. அவர்களைத் திட்டாமலும் ஏசாமலும் அடிக்காமலும் இருப்பது. ஏனெனில் அவ்வாறு நடந்து கொள்வது குழந்தைகளை மோசமாகப் பாதிக்கக் கூடும். சில வேளை திட்டல்கள் பலிக்கவும் கூடும். அவ்வாறு நடந்து விட்டால் அது அனைவருக்குமே பெரும் சோதனையாக அமைந்து விடும்.



இறுதியாக, "நல்ல மனைவியானவள் மனிதனுக்கு இம்மையிலும் மறுமையிலும் பயனளிக்கின்ற அரும் பொக்கிஷமாவாள்" என இஸ்லாம் கூறுகிறது. திர்மிதியில் பதிவாகியுள்ள ஒரு ஹதீஸில் ஸவ்பான் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "...தங்கத்தையும் வெள்ளியையும் சேமித்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வின் பாதையில் செலவழிக்காது இருப்போருக்கு..." என்ற குர்ஆன் வசனம் இறங்கிய போது நாம் ரஸூல் (ஸல்) அவர்களோடு ஒரு பிரயாணத்தில் இருந்தோம். அப்போது சில ஸஹாபாக்கள், இவ்வசனம்: "தங்கம், வெள்ளி பற்றி இறங்கியிருக்கிறது. செல்வங்களில் சிறந்தது எது எனத்தெரிந்தால் அதனை நாம் தேடிக்கொள்வோம்". என்று கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், "செல்வங்களில் சிறந்தது இறைவனைத் துதிக்கும் நாவும், அவனுக்கு நன்றி பாராட்டும் உள்ளமும், முஃமினுக்கு அவனது ஈமானைப் பாதுகாத்துக் கொள்ள உதவும் நல்ல மனைவியும்" என்று கூறினார்கள்.

இதே ஹதீஸ் அபூ தாவூதில் பின்வருமாறு பதிவாகியிருக்கிறது.. "தங்கத்தையும் வெள்ளியையும் சேமித்துக் கொண்டிருப்போர்" என்ற வசனம் இறங்கிய போது முஸ்லிம்கள் அதன் பாரதூரமான விடயமாகக் கருதினர். அப்போது உங்களுடைய கஷ்டத்தை நீக்குகிறேன் என்று கூறிய உமர் (ரழி) அவர்கள் ரஸூல் (ஸல்) அவர்களிடம் சென்று இந்த வசனம் உங்கள் தோழர்களுக்கு மிகவும் பாரதூரமானதாகப் பட்டிருக்கின்றது என்று கூறினார்கள். அப்போது ரஸூல் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். "அல்லாஹ் ஸகாத்தை விதியாக்கியிருப்பது உங்களின் எஞ்சிய செல்வங்களை தூய்மைப் படுத்தவே, வாரிசுரிமையை கடமையாக்கியிருப்பது உங்கள் சந்ததிகளுக்கு சொத்துக்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே" அப்போது உமர் (ரழி) அவர்கள் அல்லாஹு அக்பர் (அல்லாஹ்வே மிகப் பெரியவன்) என்று கூறினார்கள். பின் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "மனிதன் சேமித்து வைத்துக் கொள்ளவேண்டிய செல்வம் எதுவென்று நான் உங்களுக்கு கூறட்டுமா? நல்ல மனைவி, அவள் தனது கணவன் அவளைப் பார்த்தால் அவனை மகிழ்விப்பாள், அவன் அவளுக்கு ஏதும் கட்டளையிட்டால் அதற்கு கட்டுப்படுவாள், அவனில்லாத நேரங்களிலே அவளைப் பேணிக் கொள்வாள்" என்று கூறினார்கள்.

இறைவா... எங்கள் மனைவிமாரை நல்லவர்களாக, திருப்திப்படுபவர்களாக, மறைவானவற்றை பேணிக் கொள்பவர்களாக ஆக்கி அருள் வாயாக!

**இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் மனைவி, மக்களுக்காக செலவழிப்பதன் சிறப்பைப் பற்றி நோக்குவோம்...**

---

ஒரு புதிய பொருளாதார மாற்றத்தினை நோக்கி

# இஸ்லாமிய வங்கிகள்



J. M. FALEEL
BBA(Hons), MBA(UK),
IPFM(UK),
PG Dip in IBI(UK)

தொடர் - 01

இன்று இஸ்லாமிய வங்கிகள் பாரம்பரிய வங்கிகளுடன் ஒப்பிடும் போது பாரிய அளவு வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. அண்மையில் ஆசிய வங்கியாளர்களின் ஆராய்ச்சிக்கழகத்தின் ஆய்வுகளின் படி உலகின் மிகப்பெரிய நூறு இஸ்லாமிய வங்கிகள் வருடாந்த சொத்து வளர்ச்சியில் 26.7% கொண்டு பாரம்பரிய வங்கிகளைவிட முன்னிலையில் உள்ளன. இஸ்லாமிய நிதியியல் நிறுவனங்கள் 350 பில்லியன் டொலர்களினால் வளர்ச்சியடைந்துள்ளன. இவை ஏனைய நிதி நிறுவனங்களை விட 19.3% வளர்ச்சியாகும். இவை ஏற்கனவே மதிப்பிடப்பட்ட 15% - 20% வளர்ச்சியை விட அதிகமாகும். மேலும் இஸ்லாமிய வங்கிகள் முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாத நாடுகளிலும் வளர்ச்சியடைந்துள்ளதாக அவ்வாய்வு குறிப்பிடுகின்றது.

இஸ்லாமிய வங்கிகள் லண்டன் மற்றும் சிங்கப்பூரில் மிகவும் சிறப்பாக ஷரிஆ அடிப்படையில் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. எனினும் இஸ்லாமிய வங்கிகளின் வளர்ச்சி முழு உலக அளவிலான நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளுடன் ஒப்பிடும் போது இன்னும் சிறிதளவான சந்தைப் பரிணாமத்தையே பெற்றுள்ளது. இஸ்லாமிய வங்கிகளானது முஸ்லிம் நாடுகளில் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலுள்ளன.

ஈரான் இஸ்லாமிய குடியரசின் இஸ்லாமிய வங்கிகளின் 100 பெரிய இஸ்லாமிய வங்கிகளில் 50% மான சொத்துக்களைக் கொண்டுள்ளன. இதற்கு முக்கிய காரணம் 1983 ல் ஈரானால் முற்றாக ஷரிஆ அடிப்படையிலான வங்கி முறைமைக்கு மாற்றம் பெற்றதாகும். சூடான் அரசாங்கமும் இதே முறையை கையாண்டு 1990 ல் முற்றாக ஷரிஆ அடிப்படையிலான நிதியியலுக்கு மாறியது. பாக்கிஸ்தானில் ஷரிஆ அடிப்படையிலானதும் மரபு ரீதியானதுமான இரு வகை வங்கிகளும் காணப் படுகின்றன. சவூதிஅரேபியா இஸ்லாமிய வங்கியியலில் முக்கிய பங்காற்றுகின்றது. ஒட்டு மொத்த இஸ்லாமிய வங்கிகளின் சொத்துக்களில் 10%ஐ தன்னகத்தே கொண்ட மூன்று வங்கிகளைக் கொண்டுள்ளது. மேலும் 8 வர்த்தக வங்கிகள் இஸ்லாமிய மயப்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கின்றன. ஐக்கிய அரபு இராச்சியம், டுபாய் இஸ்லாமிய வங்கி, அபூதாபி இஸ்லாமிய வங்கி, சார்ஜா இஸ்லாமிய வங்கி போன்ற பெரும் வங்கிகளைக் கொண்டுள்ளது. மேலும் இந்நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சி இஸ்லாமிய வங்கிகளின் உருவாக்கதிற்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது. அண்மையில் டுபாய் ஆட்சியாளரினால் ஆரம்பிக்கப்பட்ட அந்நூர் இஸ்லாமிய வங்கி ஐந்து வருடங்களில் மிகப் பெரிய வங்கியாவதற்கான எதிர்பார்ப்புடன் உருவாகியுள்ளது. மலேசியா தனது மொத்த வங்கிச் சொத்துக்களில் 5.2%ஐ இஸ்லாமிய வங்கிகளைக் கொண்டுள்ளது. மலேசியாவில் இஸ்லாமிய வங்கித்துறையானது கடந்த வருடத்தைவிட அதற்கு முன்னைய வருடம் மும்மடங்காக வளர்ச்சியடைந்துள்ளது.



பஹ்ரைன் இஸ்லாமிய வங்கித் துறையில் பல வளர்ச்சிகளை அடைந்துள்ளது. பஹ்ரைன் நாட்டின் அல் பரகா வங்கியானது சர்வதேச ரீதியாக மிகவும் வெற்றிகரமான இஸ்லாமிய வங்கியாக கருதப் படுகின்றது. மத்திய கிழக்கு, தென்கிழக்காசியா நாடுகளில் 10க்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டுள்ளது. இவ்வங்கியினது மொத்த வருமானத்தில் 90% வெளிநாட்டு கிளைகளினூடாக தொழிற்படுகிறது.

ஏனைய இஸ்லாமிய நாடுகளான குவைட், கட்டார், எகிப்து, இந்தோனேசியா, பங்களாதேஷ் போன்றவையும் இஸ்லாமிய வங்கித் துறையில் மும்முரமாக ஈடுபாடு காட்டத் தொடங்கியுள்ளன.

மேலும், ஐரோப்பிய நாடுகளில் இஸ்லாமிய வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டமையால் பல இஸ்லாமிய வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றன. லண்டன் இஸ்லாமிய நிதியியல் ஐரோப்பாவின் தளமாக தன்னை மாற்றிக் கொண்டுள்ளது.

மேலும் டென்மார்க், லக்ஸம்பேர்க் போன்ற நாடுகளும் இஸ்லாமிய வங்கிகளைக் கொண்டுள்ளன.

தென்கிழக்காசியாவில் மலேசியாவின் இஸ்லாமிய வங்கிகளினால் கவரப்பட்டு தாய்லாந்தில் பல இஸ்லாமிய வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இஸ்லாமிய வங்கிகளுக்கான அனுமதி வழங்கப்படாவிட்டாலும் இஸ்லாமிய நிதியியல் நிறுவனங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக இலங்கையில் பல இஸ்லாமிய முதலீட்டு நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றன. மேலும் சில வங்கிகள் ஷரிஆ அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல் பிரிவுகளை ஆரம்பித்துள்ளமை எதிர்கால இஸ்லாமிய வங்கிகளுக்கான ஆரோக்கியமான அடித்தளமாகும்.▪

Middle East Bank

Dubai Islamic Bank

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 03

# 21ம் நூற்றாண்டின் IT

M.B.M. Shafraz
B.Sc.IT (Moratuwa),
MIEEE



**இதுவரை நாம் இலங்கை பல்கலைக்கழகங்களில் உள்வாரியாக தகவல் தொழிநுட்பத்தில் பட்டம் பெறுவதற்கான வாய்ப்புக்களைப் பார்த்தோம். இனி உள்வாரியான கற்கை நெறிகளில் இணைந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காதவர்களுக்கான வாய்ப்புக்களைப் கவனிப்போம்.**

இந்த வகையில் மிகச்சிறந்த தெரிவாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும், கணனிப் பொறியியல் பட்டத்தை (B.Tech – Computer Engineering)க் குறிப்பிடலாம்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் பற்றிய தெளிவு நமது சமூகத்தில் போதியளவு இல்லாததால் அதைப் பற்றி சிறிது விளக்கலாம் என கருதுகின்றோம். இலங்கை திறந்த பல்கலைக்கழகம் இலங்கையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் 15 தேசிய பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். இப்பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டங்கள் ஏனைய பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் பட்டங்களுக்கு எந்த வகையிலும் குறைந்ததல்ல. இப்பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பொறியியல் பட்டம் மொரட்டுவை, பேராதனைப் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பட்டங்களுக்கு இணையாக Institute of Electrical and Electronics Engineering இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பல்கலைக்கழகத்தில் உள்ள இன்னும் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால். ஒரு பாடநெறியில் நுழைவதற்கான அடிப்படைத் தகுதி 17 வயதை அடைந்திருக்க வேண்டும் என்பதாகும். அடிப்படைக் கல்வித் தகுதி எதுவும் எதிர்பார்க்கப் படுவதில்லை. உயர் தரத்திற்கு இணையான பாடக்கூறுகள் இக்கற்கை நெறியின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது. உயர் தரத்தில் தேறியவர்களுக்கு அக்கூறுகளில் இருந்து விதிவிலக்கு வழங்கப்படுகிறது. திறந்த பல்கலைக்கழகம் பற்றிய மேலதிக விபரங்களை www.ou.ac.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



அடுத்ததாக மொரட்டுவை, மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் BITஐ குறிப்பிடலாம். இவை வெளிவாரிப் பட்டங்களாகும். இப்பாட நெறிகளில் இணைவதற்கு உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியுடன் சாதாரண தரத்தில் கணிதத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருக்க வேண்டும். மொரட்டுவை, கொழும்பு பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படும் BIT பாட நெறிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு முறையே www.codl.lk, www.bit.lk ஆகிய இணையத்தளங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிறுவனங்களும் தகவல் தொழிநுட்பத்தில் பட்டப்படிப்புகளை வழங்குகின்றன. பாடநெறிகள் பற்றிய மேலதிக விபரங்களை அந்நிறுவனங்களின் இணையத் தளங்களில் பார்க்கலாம். குறிப்பிட்ட நிறுவனங்களின் பெயர்களும் இணையத்தள முகவரிகளும் கீழே தரப்பட்டுள்ளன.

SLIIT – www.sliit.lk

ITS – www.itsuniversity.lk/home.ctm

Aquinas College – www.aquinas.lk

இன் நிறுவனங்களுக்கு மேலதிகமாக வேறு பல நிறுவனங்களும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் பட்டப் படிப்புகளை இலங்கையில் நடத்துகின்றன. அது பற்றிய விபரங்களை அந்நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**இனி நாம் தகவல் தொழிநுட்பம் சாராத பட்டம் பெற்றவர்களுக்கு தகவல் தொழிநுட்பத்துறை சார்ந்த பட்டபின் படிப்பிற்கான ஒரு சில வாய்ப்புகளை நோக்குவோம்.**

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தகவல் தொழிநுட்ப பீடத்தினால் நடாத்தப்படும் MSc in information technology பாடநெறி தகவல் தொழிநுட்பம் சாராத பட்டதாரிகளுக்கென்றே விசேடமாக நடாத்தப்படும் பாடநெறியாகும். இது பற்றிய மேலதிக விபரங்களை தகவல் தொழிநுட்ப பீடத்தை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். அல்லது www.itfac.mrt.ac.lk என்ற இணையத் தளத்தின் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இன்னும் கொழும்பு பல்கலைக்கழகமும் தகவல் தொழிநுட்பம் சாராத பட்டதாரிகளுக்கென Master of information technology எனும் விசேட பட்டப் பின் படிப்பை வழங்குகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் M.Sc in Computer Science பாட நெறியில் தகவல் தொழிநுட்ப சார் பட்டதாரிகளும், தகவல் தொழிநுட்பம் சாராத விஞ்ஞான, பொறியியல் பட்டதாரிகளும் இணைந்து கொள்ளலாம்.

**இதுவரை நாம் தகவல் தொழிநுட்ப கல்வி வழிகாட்டல் தொடரில் இலங்கையிலுள்ள முறைசார் கல்வி வாய்ப்புக்கள் பற்றி ஆராய்ந்தோம் இனிவரும் இதழ்களில் தொழில் சார் கல்வி (Professional Studies) பற்றி எதிர்பாருங்கள்**

# அக்குறணை ஒரு முன்மாதிரிக் கிராமமாக...

உங்களுடன் சில நிமிடங்கள்...

இலங்கையில் பல்வேறுபட்ட கிராமங்கள் காணப்படுகின்றன. இவற்றில் சமயம், கலாச்சாரம், அரசியல், கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், பௌதீக ஒழுங்குகள், உட்கட்டமைப்பு மற்றும் நாட்டின் சட்டதிட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துதல், சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமை, புரிந்துணர்வு போன்ற பல்வேறுபட்ட துறைகளில் சிறந்து விளங்கி நாட்டின் வளர்ச்சிக்கு எவ்வாறு சிறந்த பங்களிப்பு வழங்க முடியும் என்ற சிந்தனையை முன்வைக்குமுகமாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு பகுதியே அக்குறணை ஒரு முன்மாதிரிக் கிராமமாக... என்பதாகும்.

இன்று உலகின் சகல துறைகளிலும் துரிதமாக ஏற்பட்டுவருகின்ற மாற்றங்களுக்கு நாம் எவ்வாறு முகங்கொடுக்கப்போகின்றோம்? என்பது பலர் மனதில் எழுகின்ற ஒரு பெரும் வினாவாகும். இதற்குத் தீர்வாக எமது சிந்தனைகள் ஒருமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை என நம்புகின்றோம்.

அக்குறணையைப் பொருத்தவரையில் சகல துறைகளிலும் சிறந்த புத்தி ஜீவிகளையும், சிந்தனையாளர்களையும் கொண்டிருப்பது சிறப்பம்சமாகும். ஆனால் அந்த சிந்தனைகள் நீண்ட காலமாக அவர்களுக்குள் மறைந்திருப்பதும், அவர்களுடன் அழிந்து போவதும் துரதிஷ்டவசமாகும். இந்த சிந்தனைகளை ஒன்று திரட்டி வெளிப்படுத்தும் ஒரு களமாகவே இப்பகுதி பிரசுரிக்கப்படுகின்றது.

இப்பகுதி ஒரு தனிமனித சிந்தனைக்கு அப்பாற்பட்டு, மேற்கூறப்பட்ட பல துறைசார்ந்த எமது புத்தி ஜீவிகளினால் முன்வைக்கப்படல் வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். இதனை ஒன்று திரட்டி சமூகத்திற்கு முன்வைப்பவர்களாக இருக்கவே நாம் விரும்புகின்றோம். இந்த வகையில் கடந்த இரு வெளியீடுகளில் "அக்குறணை ஒரு முன்மாதிரிக் கிராமமாக..." என்ற தலைப்பின் கீழ் ஒரு பொதுவான சிந்தனையை இலங்கையில் இருக்கின்ற மிகச் சிறந்த இஸ்லாமிய சிந்தனையாளர்களில் ஒருவரான எமது சகோதரர் உஸ்தாத் எம்.ஏ.எம். மன்சூர் (நளீமி) அவர்களின் உதவியுடன் பிரசுரித்தோம். அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் சிந்தனைகள் வெற்றிபெற பிரார்த்திக்கின்றோம்.

இனிவரும் காலங்களில் இங்கு இருக்கின்ற துறைசார்ந்த சிந்தனையாளர்களின் மூலமாக சமூகத்தில் காணப்படுகின்ற பல்வேறு துறைகளை மையப்படுத்தி அக்குறணையை இலங்கையில் ஒரு முன்மாதிரிக் கிராமமாக எவ்வாறு முன்னெடுக்க முடியும் என்பது பற்றி நோக்குவோம்...

-ஆசிரியர் பீடம்-

*** இம்முயற்சிக்கு உங்களுடைய ஆக்கபூர்வமான சிந்தனைகளையும், கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

**Special Offer**

AMD 2.8 Pro
256 MB Ram
40 GB HDD
DVD-Writer
17" R/F Black Monitor.
**Just Rs. 24750/=**
*With one year warranty*

Intel Cele. 2.8 Pro
512 MB Ram
80 GB HDD
DVD-Writer
17" R/F Black Moniter.
**Just Rs. 28500/=**
*With one year warranty*

RAMAZAN FESTIVAL DISCOUNT ON ALL ITEMS
VALUABLE AFTER SALES SERVICE
UPGRADE YOUR PC'S FOR VERY CHEAPEST PRICES

P IV 1.6 CPU WITH 17" MONITER Rs. 17,250/=
P III 933 CPU WITH 17" MONITER Rs. 11,400/=

HURRY UP
PRICES VALID UNTIL OCTOBER 31, 2008

HILLCOM COMPUTERS
194, MATALE ROAD,
KUDUGALA, AMBATHENNA.
Tel: 081-2301590 / 071-8105775

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cultural View

# அக்குறணை பெரிய பள்ளி

## வரலாற்றுப் பின்னணி

இன்று எல்லோராலும் "தாய்ப் பள்ளி" என அழைக்கப்படும் அக்குறணை பெரிய பள்ளிவாசல் பற்றிய சுருக்க வரலாற்றினைத் தருவதற்கு முனைகின்றோம். 1626ல் போர்த்துக்கேயரால் கோட்டை இராஜ்ஜியத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு கண்டி இராஜ்ஜிய மன்னன் "செனரத்" புகலிடமளித்து அரவணைத்துக் கொண்ட நிகழ்வு இலங்கை முஸ்லிம்கள் வரலாற்றை அலங்கரிக்கின்றது. தமது உயிர்களை கைகளில் பிடித்துக் கொண்டு வெளியேறிய முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் அக்குறணை புளுகொஹதென்னை பள்ளியக் கொட்டுவ பகுதியில் குடியமர்த்தப்பட்டதாக கூறப்படுகிறது. இக்குடியேற்றத்திற்கு முன்னரும் இங்கு முஸ்லிம்கள் வாழ்ந்து வந்ததாகவும் கருதப்படுகின்றது. அம்பதென்ன – பூஜாபிடிய பாதையில் முதலாம் மைல்கல்லுக்கு அண்மையில் ஆற்றோரமாக அமைந்துள்ள இவ்விடத்திலேயே அக்குறணையின் முதற் குடியேற்றம் நிகழ்ந்துள்ளதாகவும் அங்கு ஒரு பள்ளிவாசலும் அமையப்பட்டிருந்ததாகவும் ஆதலினால் தான் "பள்ளிய கொடுவ" என பெயர் சூட்டப்பட்டதாக அறியமுடிகிறது. அதே நேரம் ஆரம்ப காலத்தில் குருகொட "பள்ளியமுதுன" என்ற இடத்திலும் ஒரு பள்ளிவாசல் இருந்ததாகவும், ஆதலினால் தான் அவ்விடம் "பள்ளியமுதுன" என அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. எது எவ்வாறாயினும் "பள்ளிய கொடுவ" என்ற இடத்திலோ அல்லது "பள்ளிய முதுன" என்ற இடத்திலோ அக்காலத்தில் பள்ளிவாசல்கள் இருந்ததற்கான அடையாளங்கள் எதுவும் இன்று காணக்கூடியதாக இல்லை. ஆனால் மேல்சேனை என்ற இடத்தில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட, இன்றும் "பழைய கபுறடி" என



பள்ளியின் வலது பக்க கிப்லாப் பக்கமான தோற்றம்

அழைக்கப்படும் ஒரு பழைய கபுறு இருக்கின்றது. அதை மஸ்ஜிதாக இன்றுவரை யாரும் பயன்படுத்துவதில்லை. இவ்வாய்வுகளின் அடிப்படையில் நோக்குமிடத்து "பள்ளிய கொடுவ" என்ற இடத்திலும், "பள்ளிய முதுன" என்ற இடத்திலும் சம காலத்தில் முஸ்லிம்கள் குடியேறி வாழ்ந்து வந்திருக்கலாம் என்றும், இவ்விரு இடங்களிலும் சிறிய மஸ்ஜிதுகளை அமைத்துக் கொண்டு தமது மார்க்கக்கடமைகளை நிறைவேற்றி வந்திருக்கலாம் எனவும் நம்ப முடியுமே தவிர மஸ்ஜிதுகள் இருந்தமைக்கான தெளிவான ஆதாரங்கள் எதுவுமில்லை.

அக்குறணை தாய்ப்பள்ளி என அழைக்கப்படும் அக்குறணை பெரிய பள்ளி 1760ம் ஆண்டு காலப்பகுதியில் ஊர் மக்களின் உதவியுடன் ஒரு சிறிய கட்டிடமாக தென் இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட அப்துல் காதிர் மௌலானா என்பவரின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் சில புத்தகங்களில் இப்பள்ளியின் ஆரம்பம் பற்றி தவறான தகவல்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

வரலாறு என்பது காலத்தின் கண்ணாடியாகும். எனவே எழுத்து வடிவில் வருகின்றவை தவறாகும் போது அது எதிர்கால சந்ததியினருக்கு பிழையான தகவல்களை வழங்கக் கூடியதாக ஆவணப்படுத்தப்பட்டு விடும். எனவே தகவல்களை ஆவணப்படுத்துவதே பொருத்தமாகும். இந்த வகையில் "கசாவத்தை ஆலிம் புலவர்" என்ற புத்தகத்தின் 46ம் பக்கக் குறிப்பின்படி மேற்படி பள்ளிவாசலை கஸாவத்தை ஆலிம் அப்பா கி.பி 1864ம் ஆண்டு ஆரம்பித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் கஸாவத்தை ஆலிம் அப்பா அவர்கள் பள்ளியை மேற்கூறப்பட்ட ஆண்டில் அழகாக திருத்தி அமைத்தார்கள் என்பதே சரியான வடிவமாகும். அன்னாரினால் புனருத்தாபனம் செய்யப்பட்டதன் பின் மீண்டும் 1978ம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்டது.

இது போல்1996ம் ஆண்டு முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட "கண்டி மாவட்ட முஸ்லிம்கள்" என்ற தலைப்பிலான நூலின் 99ம் பக்கத்தில் "அல் மஸ்ஜிதுல் ஜாமிஉல் அஸ்னா" என்ற தலைப்பிட்ட குறிப்பில் 120 வருடம் பழைமை வாய்ந்த இம்மஸ்ஜித் இப்பிரதேசத்தின் ஆரம்ப பள்ளியாகும். என தொடர்கிறது. இக் கட்டுரையிலும் குறிப்பிடப்பட்டுள்ள வருடம் தவறான தகவலாகும். ஆங்கில எழுத்தாளரான A.C. லோரி என்பவரினால் எழுதப்பட்ட குறிப்பொன்றில் இப்பள்ளியைப் பற்றியும் இங்கு அமைந்துள்ள மையவாடி பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 2004ம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பட்டத்திற்காக வெளியிடப்பட்ட "வரலாற்றுப் பார்வையில் இலங்கை முஸ்லிம்களும், மஸ்ஜிதுகளும்" எனும் ஆய்வு நூலில் இப்பள்ளியைப்பற்றி பல தவறான கருத்துக்கள் இடம் பெற்றுள்ளமையை அறிந்த அப்போதைய நிர்வாகம் குறிப்பிட்ட தொகுப்பு நூலை வெளியிட்ட வெளி மாவட்டத்தை சேர்ந்த சகோதரருடன் தொடர்பு கொண்டு தமது கடும் கண்டனத்தை தெரிவித்ததுடன் குறிப்பிட்ட தலைப்பிலான சகல பிரதிகளையும் வாபஸ் பெறுமாறு வலியுறுத்தியது.

மேலும், அக்குறணையைச் சூழ உள்ள முஸ்லிம் கிராமங்களான கல்ஹின்னை, என்ருதென்ன, மடவளை, உகுரஸ்ஸபிட்டிய, இனிகலை, உடதலவின்ன, பங்கொள்ளாமட, குருகொடை, மாவத்துபொல, ரம்புக்எல போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்கள் ஜும்ஆ தொழுகைக்கும், ஜனாஸா நல்லடக்கத்திற்கும் இப்பள்ளியையே நாடி வந்துள்ளனர் என்பதை விசேடமாகக் குறிப்பிடலாம்.

அத்துடன் இப்பள்ளி பரிபாலன நடைமுறைச் செலவுகளை அக்குறணை மக்களே கவனித்து வந்ததுடன் மக்களின் அன்பளிப்பான சில கடைகளும், வயல் நிலங்களும், அரசினால் 1944ல் வழங்கப்பட்ட காணி நிலங்களும் உள்ளன.



திட்டமிடப்பட்டுள்ள புதிய பள்ளியின் மாதிரிப் படம்

மேலும் இப்பள்ளியைச் சூழ சுமார் 8½ ஏக்கர் பரப்புக்கொண்ட பெரிய மையவாடியுள்ளது. அக்குறணையின் பெரும்பான்மையான பகுதியில் இருந்து வரும் ஜனாஸாக்கள் இம்மையவாடியிலேயே நல்லடக்கம் செய்யப்படுகின்றன. சுமார் 150 முதல் 160 வருடங்களுக்கு முன் நல்லடக்கம் செய்யப்பட்ட ஜனாஸாக்களின் கல்வெட்டுக்கள் இன்றும் மையவாடியில் காணலாம்.

நாடு போற்றும் மகான் கசாவத்தை ஆலிம் அப்பாவின் அடக்கஸ்தளமும், அக்குறணை அஸ்னா பள்ளிவாசலின் சிற்பி ஹாபிழ் M.J. ஸஹித் ஸவ்லதி ஆலிம் போன்றோரின் அடக்கஸ்தளங்களும் இப்பள்ளி மையவாடிலேயே அமைந்துள்ளன. இவை கடந்த காலங்களில் பாடசாலையின் 7ம் தர தமிழ்ப் புத்தகத்தின் ஒரு பாடமாக அமைந்திருந்தமையை குறிப்பிடலாம்.

இப்பள்ளிவாசலில் இட நெருக்கடி அதிகரித்து வருவதன் காரணமாக நிர்வாக சபையினர் தீவிரமாக ஆராய்ந்து காலத்தின் தேவைக் கேற்ப சகல வசதிகளுடனும் இப்பள்ளி வாசலை புனர்நிர்மாணம் செய்ய உத்தேசித்தனர். அதற்கமைய தற்போதைய நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் B.A.C.M. ரமீமின் தலைமையில் வெகு சிறப்பாக கட்டிட வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவது இறைவனின் அருளாகும். ஊர்மக்களின் உதவியினாலும் பாரிய வேலைகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. அக்குறணையின் சகல பகுதிகளையும் உள்ளடக்கிய 30 பேர் கொண்ட குழுவினர் பெரிய பள்ளி நிர்மாண சபையில் அங்கம் வகிக்கின்றனர். கட்டிடக் குழுத் தலைவராக சமூக சேவகர் அல்ஹாஜ் M.J.H. முஹம்மத் விளங்குகிறார். பள்ளியின் நிர்வாக சபையின் பொதுச் செயலாளராக விளங்கும் அல்ஹாஜ் D.F.N முஹம்மத், மற்றும் அண்மையில் காலம் சென்ற அல்ஹாஜ் அல் ஆலீம் கதீப் செய்யத் முஹம்மத் ஆகியோரிடம் இப் பள்ளியை மையமாக வைத்து 1842 முதல் 1936 வரை எழுதப்பட்ட அப்போதைய திருமணப் பதிவுகளான "கடுத்தம்" எனப்படும் ஆவணம் இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அக்குறணையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அறபு மத்ரஸா என்ற வகையில் அப்போதைய நிர்வாக சபைக் கூட்ட அறிக்கையில் எழுதப்பட்டுள்ள விடயம் "இப்பள்ளியில் அறபு மத்ரஸா ஒன்றை நிறுவும் எண்ணம் எம்மிடம் நீண்ட காலம் இருந்து வந்துள்ளது. இதன் பிரகாரம் 1970ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் திகதி மத்ரஸாவை ஆரம்பித்தோம். இதுவரை 20 மாணவர்கள் வரை சேர்ந்துள்ளனர். கல்வி போதிப்பதற்காக கதீப் மௌலவி D.S.M. அபூபக்கர் அவர்களை தற்காலிகமாக நியமித்துள்ளோம்". என்பதாகும்.

மேலும் இப்பள்ளி வரலாற்று நிகழ்வுகளை நோக்கும் போது முகிதீன் கந்தூரி, மஷாயிகுமார் கந்தூரி என்ற இரு கந்தூரிகள் நடாத்தப்பட்டு வந்துள்ளன. வரலாற்றுக் குறிப்புக்களின் அடிப்படையில் ரபிஉல் ஆகிர் காலங்களில் முழு அக்குறணையுமே விழாக் கோலம் பூண்டு கொண்டாட்டமாக இருக்கும். பெரியவர்களும் சிறியவர்களும் பெண்களும் பள்ளிக்கு வருவதும் நேர்ச்சை செய்வதும் வழக்கமாக இருந்தது. இக்காலத்தில் பள்ளி வளவுக்குள் விசேடமாக பல கடைகள் திறந்திருக்கும். இக்காலங்களில் பள்ளியில் சமைத்த உணவுகள் அன்னதானமாக வழங்கப்படும். இக் கந்தூரியை மையமாக வைத்தே அக்குறணையை பன்னிரெண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு கந்தூரிகளை ஒவ்வொரு பகுதிக்கும் வழங்கப்பட்டது. இறுதி நாள் 12ம் நாள் பொதுக் கந்தூரியாக பள்ளியில் எடுக்கப்படும். அக்காலங்களில் இக் கந்தூரிகள் மூலம் கிடைக்கும் வருமானம் பள்ளியின் முக்கிய வருமானங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

1994ம் ஆண்டளவில் இக்கந்தூரிகளில் 'ஷரிஅத்' திற்கு முரணான சில நிகழ்வுகள் இருப்பதாக சுட்டிக்காட்டப் பட்டு முற்றாக நிறுத்தப்பட்டது. மற்றுமொரு வரலாற்று நிகழ்வாக ஷஃபான் மாதம் 15ம் இரவில் பள்ளியில், ஊர்களில் இருந்து ரொட்டிகள் ஒன்று சேர்க்கப்பட்டு வந்தன. இந்நிகழ்வும் தற்போது வழமையில் இல்லை.

அத்துடன் மீலாத் தினத்தை முன்னிட்டு பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளை முழு அக்குறணைக்கும் பொதுவாக நடாத்தி வந்தமை விசேடமாக குறிப்பிட முடியும்.

பள்ளியின் பொதுச் சேவை என்ற அடிப்படையில் பள்ளி நிர்வாக சபையின் கிளையான நியாய சபை மூலம் அக்குறணை மக்களின் பல் வேறுபட்ட பிரச்சினைகளை அணுகி ஆராய்ந்து நியாயமான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் அக்குறணையில் பல பொதுவான பிரச்சினைகளை அவ்வப்போது அதிகாரிகள், அமைச்சு மட்டத்தில் அணுகி தீர்த்து வைப்பதில் தற்போதுள்ள நிர்வாக சபை கூடிய கவனம்



150 முதல் 160 வருடங்களுக்கு முன் நல்லடக்கம் செய்யப்பட்ட ஜனாஸாக்களின் கல்வெட்டுக்கள் மற்றும் கையெழுத்தால் எழுதப்பட்டுள்ள அல்குர்ஆன் பிரதிகளை மேலேயுள்ள படங்களில் காணலாம்.

செலுத்துகின்றது. அந்த வகையில் திருமண காழியார் நியமனத்தில் அக்குறணையை தனியாகப் பிரித்து புதிய நியமனம் பெறுவதில் பல முறை நீதி அமைச்சை சந்தித்து வெற்றி பெற்றதை குறிப்பிடலாம். நீண்ட காலமாக இயங்கும் சிறுவர்களுக்கான குர்ஆன் மத்ரஸா பள்ளிக் கட்டிடத்தில் இயங்குவதால் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. ஜனாஸாக்கள் வருகின்ற போது அதற்கான கடமைகளை செய்வதற்காக வருபவர்கள் பல இடர்களை எதிர் நோக்கியதை உணர்ந்த நிர்வாக சபை அதனை தனிக் கட்டிடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சியில் இறங்கினர். தற்போது இப்பணி இறுதிக்கட்டத்தில் உள்ளது. இதில் நவீன முறையில் குர்ஆன் போதனையுடன் மார்க்க சம்பந்தமான விளக்கங்கள், பகுதி நேர குர்ஆன் மனனம் பிரிவு மற்றும் பயனுள்ள பல விடயங்கள் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன.

தகவல்:
ஜனாப் SHM நம்ஸீர்
உப. பொதுச் செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Students View

## அறிந்து கொள்ளுங்கள்

- "The 100" என்ற ஆய்வு நூலில் எல்லோருக்கும்முதன்மையாக தெரிவு செய்யப்பட்டவர் - முஹம்மது நபி (ஸல்)
- திருக்குர்ஆனை அச்சடிக்கும் போது ஏற்பட்ட சிறு பிழையின் காரணமாக அரசாங்கமே கலைக்கப்பட்ட நாடு - குவைத்
- இஸ்லாத்திற்காக உயிர் நீத்த முதல் பெண்மணி - சுமையா (ரழி)
- இஸ்லாத்தை தழுவிய பிரபல குத்துச்சண்டை வீரர் - முஹம்மது அலி
- திருக்குர்ஆனை முதலில் தமிழில் மொழி பெயர்த்தவர் - அப்துல் ஹமீது பாகவி
- "இறைவனின் வாள்" என்று அழைக்கப்பட்ட நபித்தோழர் - காலித் பின் வலீத்
- "அய்க்கா வாசிகள்" என்போர் - நபி ஸுஹைப் (அலை) காலத்தவர்கள்
- சிறந்த மருத்துவ முறைகளை உலகுக்கு முன்வைத்தவர் - இப்னு ஸீனா
- சுதந்திர இந்தியாவில் முதல் கல்வி அமைச்சர் -மௌலானா அபுல் கலாம் அஸாத்

எம். என். எம். நபாஸ்டீன் (தரம் 12)
லுக்மானியா மகா வித்தியாலயம்

## 24 மணி நேரத்தில்...

- நமது இதயம் 103689 தடவை துடிக்கின்றது.
- நமது உடல் 1.43 பைண்ட் வியர்வையை வெளியேற்றுகின்றது.
- இரத்தம் 2688000 Km தூரம் நமது உடம்பினுள் சுற்றிக் கொண்டிருக்கின்றது.
- நமது உரோமம் 0.004285 cm வளர்கின்றது.
- நாம் 483 கண அடி காற்றை உள்ளிழுக்கின்றோம்.
- நாம் 23043 தடவைகள் மூளை அணுக்களுக்கு வேலை கொடுக்கின்றோம்.

நூர் ருகையா பவுருதீன், மத்தளை வீதி, அக்குறணை.

## மறக்க முடியாத நாள்

நான் பாடசாலைக்கு சென்ற முதல் நாளை என்னால் மறக்க முடியாது. நான் பாடசாலை செல்லும் முதல் நாள் அன்று அதிகாலையிலேயே எழுந்து விட்டேன். எழுந்து காலைக் கடன்களை முடித்தேன். பாடசாலை சீருடையை அணிந்தேன். பாடசாலைக்கு செல்ல ஆயத்தமானேன். பின் எனது பெற்றோருடன் பாடசாலை சென்றேன். அங்கு என்னையும், என்னோடு சென்ற மாணவர்களையும் மிக மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். எமது வகுப்பில் நாங்கள் அமர்ந்து கொண்டோம். பின் எமது ஆசிரியரை எமக்கு அறிமுகப்படுத்தி, நாமும் ஆசிரியரிடம் அறிமுகமானோம். பின்னர் சலவாத்துடன் வீடு திரும்பினோம். அந்நாளே எனக்கு மறக்க முடியாத நாளாகும்.

ஸஹ்லா அஸ்லாம் (தரம் - 6),
அக்குறணை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயம்

## வாழ்வில் சிறந்தவை

| | |
|---|---|
| சிறந்த ஆசிரியர் | - அனுபவம் |
| சிறந்த புத்தகம் | - வாழ்க்கை |
| சிறந்த படிப்பு | - பொறுமை |
| சிறந்த நண்பன் | - புகழ் |
| சிறந்த ஆட்டம் | - கடமை |
| சிறந்த உணவு | - சிந்தனை |
| சிறந்த அணிகலன் | - புன்னகை |
| சிறந்த பாதுகாப்பு | - நேர்மை |
| சிறந்த ஊட்டம் | - கல்வி |
| சிறந்த பண்பு | - நன்றி |
| சிறந்த பொழுது போக்கு | - சேவை |
| சிறந்த மதம் | - சமத்துவம் |
| சிறந்த மார்க்கம் | - இஸ்லாம் |
| சிறந்த உறவு | - மனித குலம் |
| சிறந்த காப்புறுதி | - நற்செயல்கள் |
| சிறந்த வாசிப்பு | - "நிவ்ஸ் வீவ்" |

ஆஸிப் ரஸா
குருந்துகஹ எல அக்குறணை

## சிந்தனைத் துளிகள்

- சந்தோஷமாக இருக்கும் போது வாக்குறுதிகளைக் கொடுக்காதே, கவலையாய் இருக்கும் போது கடிதங்கள் எழுதாதே.!
- முழு உலகமும் உங்களை நழுவிச் செல்லும் வேளையில் உங்களைத் தேடி வருபவன்தான் உண்மையான நண்பன்.!
- ஆயிரம் அழகான முகங்களை விட ஒரு அன்பான இதயமே மேலானது.!
- நாம் உலக சமாதானத்தை வாய் கிழியப் பேசுகிறோம். ஆனால் எமக்குள்ளே சண்டை பிடித்துக் கொள்வது நியாயமாகுமா?!

M. B.M இஹ்ஸான் (தரம் - 8),
குருகொட ஆண்கள் பாடசாலை



எப். மர்யம் பளுலுல்லாஹ்
புலும் பர்ரி நேசரி, வீரகோன் கார்டன் – கண்டி

## நான்...

எனது பெயர் சஸ்னா அஸ்லம்
எனக்கு வயது ஆறு
நான் தரம் இரண்டில் படிக்கின்றேன்
நான் ஒழுங்காக பாடசாலைக்குச் செல்வேன்
நான் ஆசிரியர் சொற்படி நடப்பேன்
நான் விரும்பும் விளையாட்டு ஊஞ்சல்
நான் விரும்பும் உணவு ரொட்டி
நான் விரும்பும் பாடம் இஸ்லாம்
நான் விரும்பும் வர்ணம் சிவப்பு
நான் விரும்பும் பிராணி கிளி

ஸஸ்னா அஸ்லம் (தரம் - 2)
அக்குறணை முஸ்லிம் பாலிகா
மகா வித்தியாலயம்.



M.Z.M. ஸாஜித் (தரம் – 01)
புனித அந்தோனியார் கல்லூரி – கண்டி

## உலகின் மிகப் பெரிய தீவுகள்

| | |
|---|---|
| கிரீன்லாந்து | 2,176,000 ச.கி.மீ |
| நியூகினியா | 821,000 ச.கி.மீ |
| போர்னியோ | 743,000 ச.கி.மீ |
| மடகஸ்கர் | 588,000 ச.கி.மீ |
| பஃபின் (கனடா) | 476,000 ச.கி.மீ |
| சுமாத்ரா | 474,000 ச.கி.மீ |
| ஹான்சு (ஜப்பான்) | 230,000 ச.கி.மீ |
| கிரேட் (பிரிட்டன்) | 230,000 ச.கி.மீ |
| விக்டோரியா (கனடா) | 213,000 ச.கி.மீ |
| அவுஸ்திரேலியா | 7,612,000 ச.கி.மீ |

ஏ.எச்.எம். அஸ்லாட் அலி (தரம் -8)
லுக்மானியா மகா வித்தியாலயம்

## நாடுகளின் சுதந்திர தினங்கள்

| | |
|---|---|
| இலங்கை | பெப்ரவரி - 04. |
| இஸ்ரேல் | ஏப்ரல் - 03. |
| ஜப்பான் | ஏப்ரல் - 29 |
| கனடா | ஜூலை - 01. |
| அமெரிக்கா | ஜூலை - 04 |
| பிரான்ஸ் | ஜூலை - 14. |
| தாய்லாந்து | ஜூன் - 24 |
| பாகிஸ்தான் | ஆகஸ்ட் - 14 |
| இந்தியா | ஆகஸ்ட் - 15. |
| துருக்கி | நவம்பர் - 01 |

ஏ. ஆர். எம். மஸாஹிரா
அக்குறணை முஸ்லிம் பாலிகா
மகா வித்தியாலயம்.

## பழமொழிகள்

- உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
- வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை.
- தேள் நெருப்பில் விழுந்தால் எடுத்து விட்டவனுக்கே கொட்டும்.
- தீராக் கோபம் போராய் முடியும்.
- கற்பில்லா அழகு வாசனை இல்லாப்பூ

ஏ.எம்.எம். முஸாத் (தரம் -4)
அஸ்ஹர் கல்லூரி — அக்குறணை



அல்தாப் (தரம் -1)
தெழும்புகஹவத்த மு.வி.

## Guidance Center வழங்கும் வினா விடைப் போட்டி - 02

**இப்போட்டியில் பங்கு பற்றி 1000 ரூபா பணப்பரிசை வென்றெடுக்க நீங்கள் தயாரா?**

**இப்பத்திரிகையை பூரணமாக வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடைகளை எழுதி வெற்றியாளராகுங்கள்...**

### வினாக்கள்

01. இஸ்லாத்திற்காக உயிர் நீத்த முதல் பெண்மணி யார்?
02. அல்ஹாஜ் ACM ராசிக் அவர்கள் எவ்வளவு காலம் அரச சேவையில் கடமையாற்றுகின்றார்?
03. முற்காலத்தில் திருமணப்பதிவேட்டை எப்பெயர் கொண்டு அழைத்தனர்?
04. ஒரு குழந்தை 08 வயதை அடையும் போது எத்தனை மொழிகளைக் கற்றுக் கொள்ளும் ஆற்றல் காணப்படுகின்றது?

### விடைகள்

01. ________ 02. ________
03. ________ 04. ________

பெயர் : ________
முகவரி : ________

**சென்ற மாதத்திற்கான சரியான விடைகள்**
1. 1965ல் 2. ரூபா 15.00 3. மன அழுத்தம் 4. செம்பு

**வெற்றியாளர்**
M.S.F. அஸ்ரார்
வராகஸ்ஹின்ன
அக்குறணை.

**பாராட்டுறியவர்கள்**
N.M. அப்னா ஸெரீன்
மல்கமன்தெனிய, அலவத்துகொட
M. A. ஜபீர்
மல்கமன்தெனிய, அலவத்துகொட
M. அஸ்வர் அஸ்ரா
குருந்துகஹஎல மு.வி
A.H.M. ஸாலிதீன்
கடுகஸ்தொட்ட.
ஸர்மிலா மிர்ஸாட்
வராகஸ்ஹின்ன.

## சுவாரசியமான Sudoku - 02

வெற்றியாளரும்
பாராட்டுக்குரிய 10 அதிஷ்டசாலிகளும்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 2 | 8 | 9 | 5 | 4 | 7 | 6 |
| 5 | 6 | 9 | 1 | 4 | 7 | 3 | 8 | 2 |
| 4 | 8 | 7 | 2 | 6 | 3 | 5 | 1 | 9 |
| 9 | 5 | 1 | 7 | 3 | 6 | 2 | 4 | 8 |
| 7 | 2 | 8 | 5 | 1 | 4 | 6 | 9 | 3 |
| 6 | 3 | 4 | 9 | 8 | 2 | 1 | 5 | 7 |
| 2 | 4 | 5 | 6 | 7 | 9 | 8 | 3 | 1 |
| 1 | 7 | 6 | 3 | 5 | 8 | 9 | 2 | 4 |
| 8 | 9 | 3 | 4 | 2 | 1 | 7 | 6 | 5 |

M.I.F. நுஸ்லா
கஸாவத்தை
பூஜாபிடிய.

M.A. அஸ்பா
குருந்துகஹஎல மு.வி

M.R.F. ஹானயா
அக்குறணை முஸ்லிம்
பாலிகா வித்தியாலயம்

M.R.A. ரஸானி
புளுகொஹதென்ன,
அக்குறணை.

நூனா ஸஹ்னாஸ் நாஜீமுடீன்
துனவில வீதி,
அக்குறணை.

M. இஹ்ஸான் புஹாரி
226/7 ஹீபிடிய, பங்கொள்ளாமட

இவருக்கான பரிசினை
News View காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## அக்குறணை Choice Park வழங்கும்

## சுவாரசியமான Sudoku - 03

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | 7 | | 9 | 1 | | 3 |
| 1 | | 3 | 4 | | 6 | | | |
| 7 | 8 | | | 2 | | 4 | | 6 |
| 3 | | | 6 | | 8 | | | 2 |
| 9 | 1 | | | 4 | | 6 | | 8 |
| | | 8 | | 1 | | 3 | | |
| 2 | | 4 | | | 7 | | | 1 |
| | 9 | | 2 | | 4 | 5 | | |
| 5 | | 7 | | 9 | | 2 | | 4 |

இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் அதுபோல் 3 x 3 எனும் பெரிய கட்டங்களிலும் 01 முதல் 09 வரையான இலக்கங்களைப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புங்கள். இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் நிரல், நிரை வரிசையில் ஒரு இலக்கம் மீண்டும் வரக்கூடாது. அது போல் 3 x 3 எனும் தடித்த பெரிய கட்டங்களிலும் ஒரு இலக்கம் மீண்டும் இடம் பெறக் கூடாது.

பெயர் : ________
முகவரி : ________

**மேலேயுள்ள போட்டிகளுக்கான விடைகளை ஒக்டோபர் 20ம் திகதிக்கு முன்னர் News View காரியாலய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Callpoint வழங்கும் சிறப்புக் கவிதைக்கு Cell Phone பரிசு

03



**Cell phone பரிசினை வென்றெடுக்க கவிஞர்களே......! உங்களுக்கு ஓர் சந்தர்ப்பம்**

குறிப்பிட்ட சித்திரம் பிரதிபலிப்பதனை 12 வரிகளுக்குள் கருத்துச் செறிவான கவியோட்டத்தில் ஒரு தலைப்பினையிட்டு எழுதியனுப்புங்கள். சித்திரத்திற்கு பொருத்தமான கவிதையென தெரிவு செய்யப்படும். சிறப்பு கவிதைக்கு Cell Phone பரிசு வழங்கப்படும்.

எதிர்வரும் ஒக்டோபர் 20க்கு முன்னர் மேலே காணப்படும் சித்திரத்தை வெட்டி ஒட்டி அனுப்பி வைக்கப்படும் கவிதைகள் மாத்திரமே போட்டிக்கு தெரிவு செய்யப்படும்.

தொலைத் தொடர்புத் துறையில்
உன்னத சேவையாற்றி வரும்
மக்கள் வங்கிக்கு அருகாமையில்
அமைந்துள்ள அக்குறணை
**Callpoint**
நிறுவனம் வழங்கும்
இப்பகுதிக்கு, தங்களுடைய கவிதைகளை
இன்றே எழுதி **Cell Phone** வெற்றியாளராகுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
சிறப்புக் கவிதைக்கு Cell Phone பரிசு
News View
ஈமெக்ஸ் பப்ளிகேஷன்
190/2/1, இரண்டாம் மாடி, மார்கட் கட்டிடம்,
அக்குறணை - 06

**Cell Phone** வெற்றியாளர்



சிறப்புக் கவிதைக்கு **Cell Phone** பரிசு வெற்றியாளர் சார்பாக அவரது சகோதரர் பரிசினை பெற்றுக்கொண்ட போது...

சுவாரசியமான **Sudoku** வெற்றியாளர்



சுவாரசியமான **Sudoku** வெற்றியாளர் பரிசினை பெற்றுக்கொண்ட போது...

## Cell Phone பரிசினை வென்றெடுத்த கவிதை



### நான்...

வங்கிகளின் அத்திவாரம்
உலக அழிவின் முன்னோடி
வயிறு நிரப்பும் அமுதசுரபி
மனித சாதனையின் துணைவன்

மனப்பாங்கு வளர்ச்சியின் ஆசான்
அறிவுத் தெளிவின் நூலகம்
குற்றச் செயல்களின் தடுப்பூசி
சேவை உயிர்ப்பின் உரம்

அறிவாளியின் பொக்கிஷம்
அறிவிலியின் சாக்கடை
மனித நோயின் காரணி
தூய்மைப்படுத்தினால் நிவாரணி

M.Y. நிஸா இர்ஷாட்
வராகஸ்ஹின்ன.

### ப...ண...ம்

மூன்றெழுத்துத்தான் இதற்கு
முடிவுகளோ பல திக்கு...!
பணத்தைக் கொண்டு எதை வேண்டுமானாலும்
வாங்கலாம் எனப் புறப்பட்டாய் அன்று...
தொலைந்து போன நிம்மதியை
தேடி அலைகிறாய் இன்று...!
கட்டுக்கட்டாய்க் காசு
கை நிறைய சம்பாதித்த நீ...
உலகை வாங்கும் அவசரத்தில்
ஹலால் ஹறாம் பேண மறுத்ததேனோ...?
உலகத்தை சம்பாதித்த சந்தோசத்திலா
இந்த ஆணவச் செறுக்கு உனக்கு...?
சற்று சிந்தித்ததுப்பார்
மறுமையில் இறைவனின் கேள்விக்கு
பதில் தர முடியுமா என்று...!!!

M.S.F. ஸாமிலா
குருந்துகஹஎல, அக்குறணை

### பணம் எனும் கூர் ஆயுதம்

மனிதன் என்ற இறைவனது படைப்பை
பிணம் உண்ண வைத்து – அவனது
மனசாட்சியை உண்ட கொடும் ஆயுதம் நீ!
உலகில் ஈடிணையின்றி உள்ளத்தில்
உதிக்கும் அன்பை – விலைபேசி
மனித உறவுகளிற்குள் தீ எழுப்பிச்சென்ற
தீச்சுடர் நீ!
வறுமை எனும் அவலப் பிடியில்
சிக்குண்டவரை மீட்டாமல் - கொடிய
வறுமைச் சமுத்திரத்தில் அவர்களை
மூழ்கடித்த ஓடம் நீ!
போதுமென்ற மனமே பொன் செய்யும்
உன்னை அளவுடன் வைத்திருந்தால் - இந்த
உலகில் ஏழை பணக்காரன் என்ற பேதமை
என்றோ ஒழிந்து போயிருக்கும்!

ஸப்னா ஸகீன்
தெல்கஸ்தென்ன, அக்குறணை.

### புது யுகப் பிரசவிப்பு...

புரட்சிப் புத்தாக்கத்திற்கே
புது வித்திட்ட இப் பூவுலகில்!
புதுமைக் கேள்வி பணப் பிரசவத்திற்கே!
வேஷத்தின் ஜனநாயகமும்,
வேதமேந்தும் கைகளில் தவழும் நோட்டுக்களும்,
வேர் முனையிலே ஒழுக்கக்கேடு
அராஜகத்திற்கு அத்தாட்சி...!
நிஜ விம்பங்களை உலகுக்கு நியாயப்படுத்தும்
நிதமிக்க சத்தியக் குரல்களை... நசுக்க
நன்றி கெட்ட - கருவறுக்கும்
காடையர் தோற்றம் உன் மோகத்தால்
பணத்தால் பிணமாகிப்போன இதயமதை,
பண்பால் உயிர் கொடுத்து - இன்றே
புறப்படு மனிதா... நாளை ஜெயம் பெற...

A.C.F. ஸரீஹா
பங்கொள்ளாமட, அக்குறணை.

### ஆளும் ஆயுதம்

வறுமையின் வாடையில்
ஜீவிக்கும் ஜீவன்கள் அறியுமா
உன் வாடை? - இன்று
நீதியின் கையில் இல்லை நீ
ஆனால் போதைக்காகப்
பலர் கையில் குதிக்கிராய் நீ
பதவி ஆசையில்,
மனிதமிழந்த மானிடனின் கரத்தில்
சிறைபட்டு போனாயோ!
விடுதலைக்கு ஏங்குகிறாயா?
இங்கு சேரியில் உனக்காக
ஏங்குவோர் எத்தனை பேர் தெரியுமா?

M.M.F. ஸிம்ரா
மாத்தளை வீதி,
அக்குறணை.

## ஜுமுமா அபூசாலி



அஸ்ஸலாமு அலைக்கும் சீதேவிகளே,
அல்லாஹ்ட கிருபயால இந்த மாச News Viewலயும் சந்திக்கிறதுல செரியான சந்தோசம்டா மானே. அதோட, நான் சொல்ற விஷயங்கள நீங்களோல் எல்லாம் நெல்லா ஆசையோட வாசிக்கிறதா கேள்விப்பட்டேன். இதுவும் சந்தோசமான செய்திதான்.

இண்டக்கும் ஒரு செய்தி ஒங்களுக்கிட்ட சொல்லனும். இத கேட்டோன்னக்கி கோவம் வந்து மேல பாஞ்சி புழாம கவனமா யோசிச்சிப் பாருங்கோடா வாப்பா? ஏத்த செய்திண்டு தெரியுமா? எங்கட ஊர்ல உள்ள Bank கள்ல பீத்துப் பாத்தா வெளங்கும், எங்கட பொம்புளகள் அபாயாகள போட்டுண்டும், ஹிஜாபுகள போட்டுண்டும் போத்திண்டும் சின்ன சின்ன பார்சல்கள சுத்திண்டு போலீன்ல நிண்டுன்டு ஈர. ஏத்தண்டு பாத்தா நக நட்டுகள ஈடுவெக்க வந்தீரடாவாப்பா. இது எங்கட ஊருகளுக்கு புடிச்ச பெரிய்ய முஸீபத்து... இதப்பத்தி யோசிக்க யோசிக்க தெலதான் சுத்துது. இதப்பத்தி பேசுரத்துக்கும் ஒத்தரும் இல்ல. எங்கட ஊரு பெரிய பணக்கார ஊருண்டு பேர் மட்டும் தான், ஆனா உள்ளால நடக்குறது ஏங்களுக்கல்ல தெரியும்.

கைல காசி இல்லாட்டி நகய வெக்காட்டி வேற என்னத்தயத் தான் செய்றண்டு நீங்கள்கள் கேக்குறது வெளங்குது. ஆனா காசி இல்லாட்டி நகய மட்டும் வெக்கிறதா தீர்வுண்டு நான் கேக்கிறேன்! என்ன வெளங்குதா?!

எங்கட ஊர்ல ஒரு கல்யாணம் வந்தா மாட்டுக்கு கட்ற மாதிரி நக போடணும். வசதி இல்லாத ஆக்கள் அங்கால இங்கால கைமாத்துக்கு வாங்கி, நகய போட்டு கலியாணம் எடுக்குற இந்த நகய கண்டொன்னக்கி, எங்கட மக்கு மாப்புள்ள மாருக்கு தல கால் வெளங்குறல்ல. அத மாதி இனி பொண்டாட்டிட நகய வெச்சிட்டு யாவாரம்!!! இந்த எரும மாடுகள் பொம்புள மார்கள பேங்குக்கு அனுப்பி நகயு வெச்சித்தான் யாவாரம் பண்ணனுமா? இப்பிடி ஹராமான யாவாரம் தலிக்குமாட வாப்பா? காலம் போற போக்கப் பாத்தலா மானே? கழுத தேஞ்சி கட்டெரும்பான கத தான்!

இது ஒரு பக்கம் ஈக்க இந்த பிரச்சினைய எப்பிடி நிப்பாட்டுறண்டு நாங்க யோசிக்கோனும். ஊர்ல உள்ள படிச்சாக்கள், உலமாக்கள், பணக்கார ஆக்கள் எல்லாரும் சேந்து எத்தயாலும் ஒரு முடிவுக்கு வர வேனும். இல்லாம பள்ளில பீத்து தொழுதுட்டு வந்தால் மட்டும் சொர்கத்துக்கு பீத்திட ஏலா. இப்பிடியான பிரச்சினைகளையும் கொஞ்சம் பாத்து ஒரு முடிவுக்கு வெறோனும் இல்லாம எவ்வலோ நென்ம செஞ்சியும் வேளில்ல.

இந்த விசயத்த ஒங்ககிட்ட சொல்லிட்டேன். இதப்பத்தி கொஞ்சம் மூளைய கசக்கி யோசித்து ஒரு முடிவு எடுக்கனும். இதுதான் இந்த அபூசாலியோட ஆச...!
சந்திக்கிறேன் வாப்பா

### ஜுமுமா அபூசாலி பதில்கள்

கே:அபூஸாலகாக்கா! எங்கட ஊர்ல நடக்குற திருமணங்களைப் பத்தி ஒரே வசனத்தில் ஒரு கருத்து சொல்ல முடியுமா?
முஹம்மது ராஸி - குருகொடை

ப: அடுத்த வீட்டு கோழிய களவெடுத்து வாப்பட பேர்ல கத்தம் குடுக்குறது.

கே:துன்பம் வரும் போது சிரிக்க வேண்டும் என்கிறார்களே?
பத்திமா நஸ்லியா - துனுவில வீதி

ப: அது தான் நான் சிரிச்சிக் கிட்டே இக்கிற...

நீங்களும் ஏத்தயாலும் கேக்கோனும்டா எழுதிப் போடுங்கோ.
ஜுமுமா அபூசாலி
News View
Emex Publication
190/2/1, Market Complex, Akurana

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறம் மாறிய நிமிஷங்கள்

சிறுகதை

ஷாரா

காலைச் சூரியனின் இளம் கதிர்கள் ஜன்னலினூடாக வந்து அறையை ஒளிமயமாக்கின. ஸுபஹ் தொழுதுவிட்டு கட்டிலில் சாய்ந்த ரஷாட் தூங்காது புரண்டு கொண்டிருந்தான். "உம்மா எப்போதுதான் முடிவெடுக்கப் போறாவோ" என அவன் மனம் அங்கலாய்த்தது.

ரஷாட் தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் செய்து கொண்டிருக்கின்றான். நல்ல உழைப்பாளி நேர்மையானவன். இஸ்லாத்துக்காக உழைப்பவனாக இல்லாவிட்டாலும் தனக்குத் தெரிந்த அளவில் மார்க்கத்தை பேணி நடப்பவன். எனவே, ஊரில் அவனுக்கு நல்ல மதிப்பிருந்தது. அவனுக்கு நானாமார் நான்கு பேர் இருக்கின்றனர். அந்த நான்கு பேரும் அவனைப போல் படித்திருக்க வில்லை. அவர்களுக்கு உம்மா எப்படி எப்படியோ திருமணம் செய்து வைத்துவிட்டாள். அவரது கனவுகளை நனவாக்க வந்துள்ள இந்த இளைய குமாரனுக்குப் பெண் தேடுவதில்தான் மும்முரமாக ஈடுபட்டாள்.

மணி பதினொன்றைத் தாண்டிக் கொண்டிருந்தது. உம்மா வீட்டிற்குள் வந்த சத்தம் கேட்டு எழுந்து போனான் ரஷாட். மின்விசிறியைச் சுழலவிட்டு கட்டிலில் சாய்ந்திருந்தார் உம்மா. "காலையிலேயே எங்க போனீங்க உம்மா?" "வேற எங்கே! பொண்ணொன்டு பார்க்கத்தான்" களைப்பு உம்மாவின் குரலில் தெரிந்தது. "இதாவது உங்களுக்குப் புடிச்சிருக்குதா?" ஆர்வத்தோடு கேட்டான் ரஷாட். "குடும்பமென்டால் நல்லம்தான். வாப்பா மௌத்து ஆனா உம்மாகாரிட நாக்குத்தான் கொஞ்சம் நீளம் கூட" "அளந்து பாத்தீங்களா உம்மா, எத்தன சென்றிமீட்டர்?" சிரித்துக் கொண்டே கேட்டான். "இப்போ நீங்க எனக்குப் பேசுவது உம்மாவையா? மகளையா?" ரஷாதின் கேள்வி உம்மாவுக்கு மேலும் எரிச்சலூட்டியது, "புள்ள நல்லம்டா சரிதானே! என்னத்துக்கு உம்மாவப் பத்திய ரிசர்ச்?"

"நாளைக்கு அவ ஒன்ட மாமியானா ஒன்ன வறுவறுவென்று வறுத்தெடுத்துடுவா" உம்மா நடந்தவற்றை சொல்லிக் கொண்டு போனா. இதற்கப்பால் உம்மாவிடம் எதுவும் பேசமுடியாது. இந்த உம்மாவே இப்படித்தான். லேசில் திருப்திப் பட மாட்டா. என்ன செய்வது? உம்மாவை மீறிப் போயப் பழக்கமில்லை. உம்மாவுக்குத் தொண்ணூற்றைந்து வீதம் திருப்தியாக இருந்தாலும் சரிவராது. நூறு வீதம் திருப்தியாக இருக்க வேண்டுமென்று தேடுவா.

இன்னுமொரு நாள் உம்மாவும் சாச்சியும் போய்ப் பெண்பார்த்து விட்டு வந்திருந்தாகள். கடையில் சாமான் பார்ப்பது போல வீடுகளிலுள்ள குமர்களைப் பார்த்துத் திரிய வேண்டாம் என்றால் உம்மாவுக்குக் கோபத்தில் முகம் சிவந்துவிடும்.

"அப்போ எப்படியடா பெண் தேடுறது?" உம்மாவுக்கு பதில் சொல்லாமல் அவன் மௌனமானான். சாச்சியுடன் போய்ப் பார்த்து விட்டு வந்த விடயத்தைப் பற்றி அவன் விசாரித்தான்.

"எல்லாம் நல்லம். ஆனால் பொண்ட மூக்குத்தான் கொஞ்சம் சப்பை" "ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்யலாம் உம்மா" என்று சொல்லிவிட்டு கலகலவென சிரித்தான்.

"இப்படிக் கையையும் காலையும் மூக்கையும் அளந்து அளந்து பெண் தேட ஏலுமா உம்மா? நல்ல குணமுள்ள புள்ளையா, ஒழுங்கான குடும்பமா இருந்தா போதாத? ப்ளீஸ் இந்தக் கூத்தக் கொஞ்சம் நிறுத்துங்கோ!" இப்போது அவன் முகத்தில் சிரிப்பு இல்லை.

"நீ பேசாமல் இரு! ஏன்ட ஊட்டுக்கு வார மருமகள் எப்படி இருக்கோணும் என்டு எனக்குத் தெரியும்" உம்மா கண்டிப்பாய்ச் சொன்னாள். அவன் எல்லாவற்றுக்கும் அடங்கிப் போவான் என்பது உம்மாவின் நம்பிக்கை.

"அப்ப உங்கட மகனுக்கு இந்த உலகத்தில கல்யாணம் நடக்காது. சொர்க்கத்துல ஹூருலீன்களோடயாவது நடக்குமோ தெரியாது" எப்போதும் சிரித்துச் சிரித்து நகைச்சுவையோடு பேசும் மகன் வழமைக்கு மாறாகக் கோபமாகப் பேசிவிட்டுச் செல்வது கண்டு அதிர்ந்தார் உம்மா.

"தாத்தா! நெலம எனக்குப் பிடிக்கல்ல. அவன் இனிப் பொறுக்க மாட்டான் போல. எதையாவது ஒன்டச் செஞ்சு வைங்கோ. இல்லாட்டி அவனாக ஒன்டத் தேடிக்கொண்டு வந்தாலும் வருவான். அதுக்குப் பொறகு யோசிச்சு வேலையில்ல" சாச்சி சொல்லவும் உம்மா கலங்கிப் போனாள். "அப்படியும் நடக்குமோ" உம்மாவின் மனம் பதறியது.

இனித் தாமதிக்கக் கூடாதென முடிவெடுத்து விட்டார் உம்மா. அவசர அவசரமாகத் தேடியதில் அந்த இடம் உம்மாவுக்கு பிடித்து விட்டது. அவள் பேரழகியல்ல என்றாலும் குறைசொல்லவும் முடிய வில்லை. புத்தளத்தில் அரபுக் கல்லூரியில் படித்து முடித்து விட்டு வந்திருந்தாள் பர்ஹா. நல்ல கெட்டிக்காரி. கைவேலைகளிலும் தேர்ச்சி பெற்றவள். என்று தெரிந்தவர்கள் சொன்னார்கள். அடக்கமான பேச்சு உம்மாவைக் கவர்ந்தது. மாப்பிள்ளைக்கு பெண்ணை காட்டவேண்டும் என்றபோது தனது எதிர்ப்பை பெற்றோரிடம் தெரிவித்தாள் பர்ஹா.

"கண்ட கண்டவங்களுக்கெல்லாம் என்னக் காட்ட வேண்டாம் உம்மா. என்னக் கட்டாயம் முடிக்கிறதாக முடிவெடுத்தால் மட்டும் காட்டுங்கோ" அவளது வேண்டுகோளை தங்கள் கருத்தாக அவளது பெற்றோர் மாப்பிள்ளை வீட்டாருக்கு அறிவித்தனர். இதைக் கேள்விப்பட்ட உம்மாவுக்கு சூடேறியது.

"மாப்பிள்ளை வீட்டாருக்கு அடங்கிப் போக வேண்டியவங்க இப்பவே சட்டம் போட வாராங்களா?" உம்மா சீறினாள்.

"உம்மா கொஞ்சம் பேசாம இருங்கோ. நான் விசாரிச்சுப் பார்த்ததுல இந்த விஷயம் எனக்குப் புடிச்சிருக்குது. மார்க்கம் படிச்ச புள்ள. அதனால் இந்த விஷயத்தைச் செய்யிறதுல இன்ஷா அல்லாஹ் நான் உறுதியா இருப்பேன் என்டு சொல்லியனுப்புங்கோ" மகனின் பதிலைக் கேட்டு உம்மாவுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. தந்தையின் எச்சரிக்கை நினைவுக்கு வரவே தன்னை அடக்கிக் கொண்டாள்.

பர்ஹாவைப் போய்ப்பார்த்தான் ரஷாட். அவன் மனது நிறைந்தது. இனி திருமணத்துக்கு நாள் குறிக்க வேண்டியதுதான் என அவன் நினைத்துக் கொண்டிருந்தபோது குண்டைத் தூக்கி போட்டர் உம்மா.

"கல்யாணம் நடக்க வேணுமென்டால் பத்துப் பவுண் நகைபோட வேணும்" ரஷாட் உம்மாவை கண்களால் தடுக்கப் பார்த்தான். உம்மா பிடிவாதமாக இருந்தார். பர்ஹா குடும்பத்தினர் அதிர்ந்தனர். ஒரு காலத்தில் நன்றாக இருந்தவர்கள்தான். பர்ஹாவின் வாப்பா நோயாளியானதில் குடும்ப நிலை கீழிறங்கியது. திடீரென பத்துப் பவுனுக்கு எங்கே போவது? சீதனம் கொடுத்துச் செய்யும் திருமணம் எனக்கு வேண்டாம் எனக் கடுமையாக எதிர்த்தாள் பர்ஹா. கௌரவமான தொழிலும் நல்ல பண்புகளும் அமைந்த ரஷாடை வேண்டாம் என்று சொல்ல அவள் பெற்றோருக்கு மனமில்லை. என்ன செய்தேனும் இந்தத் திருமணத்தை நடத்தியே தீருவது என அவர்கள் தீர்மானித்தனர்.

அவன உம்மாவோடு வாதாடிப்பார்த்தான். உனக்குப் பிடித்ததைச் செய்து வைக்கிறேன். நான் சொல்கிறபடி சீதனம் எடுக்க வேண்டும். இல்லா விட்டால் உனக்கு உம்மா என்றொரு உறவு இல்லை என்று சொல்லி விட்டார் உம்மா. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தான் ரஷாட். பாவம் அந்தக் குடும்பம் என்ன பாடுபடுகிறதோ என்று அவன் மனம் கவலைப்பட்டது.

எப்படியாவது பத்துப் பவுண்களுக்கான பணத்தைத் தேடவேண்டும் என்று பர்ஹாவின் வாப்பா தடுமாறிக் கொண்டிருப்பதாவும் தனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம் என்று பர்ஹா சொல்வதாகவும் கேள்விப்பட்டான் அவன். என்ன செய்வதென்று புரியவில்லை. அவர்களிடம் தனது நிலைப்பாட்டை விளக்கிச் சொல்வதற்காக அவர்களது தொலைபேசி எண்ணைத் தேடினான். வசதியாய் இருந்த காலத்தில் எடுத்த தொலைபேசி இப்போது வெளியிலிருந்து வரும் அழைப்புக்கு மட்டும் என வரையறுக்கப்பட்டிருந்தது. தொலைபேசி மணி அடிக்கவும் வீட்டில் யாரும் இல்லாததால் பர்ஹா போய் எடுத்தாள். ரஷாட் என்றதும் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. பேச்சு வரவில்லை. பர்ஹாதான் போனை எடுப்பாள் என்று அவனும் கூட எதிர்பார்க்கவில்லை. என்ன பேசுவதென்று தெரியாமல் தடுமாறினாள்.

"சே... இவரோட எனக்கென்ன பேச்சு" என நினைத்து ரிஸீவரை வைக்கப் போனவள் ஒரு கணம் சிந்தித்தாள். இந்த விஷயத்தை பெற்றோர் விடமாட்டார்கள் என்பது உறுதி. அவனும் நல்லவன் எனறுதான் எல்லோரும் சொல்கிறார்கள். பாவம்! உம்மாவை மீற முடியாமல் இருக்கிறார். ஆனால் இப்படிப்பட்ட திருமணம் நடப்பதற்கு நான் விருப்பமில்லை என்பதை இவரிடமே சொல்லி விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவோமா என்று நினைத்தவளாக ரிஸீவரை காதில் வைத்தாள். என்ன பேசுவது என்று தெரியாமல் அவன் இரண்டு மூன்று கேள்விகள் கேட்டான். வியர்வையில் உடல் குளிக்க, அவற்றுக்கு ஒற்றைச் சொல்லில் பதில் சொல்லி முடிக்க தொண்டை வரண்டு போனது போலிருந்தது. பயத்தில் அவள் வேகமாக மூச்சு வாங்கும் சத்தம் அவனுக்கும் தெளிவாகக் கேட்டது. அவனது பேச்சில் தெரிந்த கட்டுப்பாடும் மரியாதையும் அவளுக்கு அவன்மேல் மதிப்பை ஏற்படுத்தியது.

"உம்மா பத்துப்பவுண் கேக்குறாங்க இல்லையா" அவன் மெதுவாக ஆரம்பித்தான். அவளுக்குள் திடீரென ஓர் எண்ணம். "பரவாயில்லை" என்றாள் தடுமாறியபடி. "பரவாயில்லையா?" ஆச்சரியமாகக் கேட்டான். அவள் நினைத்ததைச் சொல்ல நாக்கு ஒத்துழைக்க மறுத்தது. தான் இப்படிப்பேசுவது சரியா, பிழையா? அவள் மனம் போராடியது.. ஒரு ஹராத்தில் தன் வாழ்வு ஆரம்பிப்பதைவிட இது பராவாயில்லை என அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

"மஹர்..... எவ்வளவு.... தர... வேணும் என்டு.. கேக்கல்லையே!" அவளையறியாமலே கேட்டு விட்டாள். அவன் மெதுவாக சிரித்தபடியே கேட்டான். "மஹர் என்ன... விருப்பமான தொகையைத் தாரதுதானே?" "இல்ல..... கேட்டுத்தான்... குடுக்க வேணும்" "அப்படியா.... தெரியாதே... சரி.. எவ்வளவு வேணும் எண்டு சொல்லுங்க" அவளது கால்கள் நடுங்கின. எச்சிலை விழுங்கிக்கொண்டு சொல்லத் தயாரானாள்.

"பதினைந்து பவுண் நகை" என்ன பதினைந்து பவுனா? இவ்வளவு பெரிய தொக மஹர் கொடுக்கிறதா நான் கேள்விப் பட்டதே இல்லியே!"

"ஹராத்த விட ஹலால் எப்பவும் மேலதானே இருக்க வேணும்" "சரி அவ்வளவு மஹர் தர நான் ஏலாது என்டால்?" "வேற இடம் பாருங்க!" சடாரென ரிஸீவரை வைத்து விட்டுப் போய் தொப்பெனக் கட்டிலில் விழுந்தாள். பல மைல் தூரம் ஓடி வந்ததுபோல அவளுக்கு மூச்சு வாங்கியது.

"வேறு இடம் பாருங்க" அவனுக்கு நெஞ்சில் ஓங்கி அறைந்தது போலிருந்தது. அவன் ஏற்கனவே தீர்மானித்து விட்டான். வேறு இடம் பார்க்க மனம் என்ன கரும்பலகையா? மனதுக்குள் கணக்குப் பார்த்தான். அவள் கணக்குப் புரிந்தபோது, தனக்குள் சிரித்துக் கொண்டான். "கெட்டிக்காரி" அவன் வாய் மெதுவாகச் சொன்னது. இனித் தாமதித்தால் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விடும் என அவன் பயந்தான்.

"உம்மா! சீதனக் கதையை விடுங்கோ! நான் ஐந்து பவுண் மஹர் கொடுத்து பர்ஹாவை முடிக்கப் போறன். இன்ஷா அல்லாஹ்". அவன் பேச்சைக் கேட்டுக் குழம்பிப் போனார் உம்மா.

"என்ன..." உம்மாவைத் தொடர அவன் விடவில்லை கோபமாக உம்மாவின் வாயை அடைக்கும் வகையில். கூறிவிட்டு வேகமாக வெளியேறும் மகனைத் திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள் உம்மா.

பத்து பவுனுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த பர்ஹாவின் குடும்பத்தினர் சீதனம் இல்லாமல் ஐந்து பவுன் மஹர் தந்து மணமுடிப்பதாக மாப்பிள்ளை சொல்லியனுப்பிய செய்தியை கேட்டு ஆச்சரியத்தில் மூழ்கினார்கள்.

தனக்குள் சிரித்துக்கொண்ட பர்ஹா தன் வாழ்வைப் பாதுகாத்துக் தந்த அல்லாஹ்வை மனதாரப் புகழ்ந்தாள். ■

நன்றி:
இஸ்லாஹியா 17வது ஆண்டு நிறைவு மலர்
(சில மாற்றங்களுடன்)

## நாய்க்குத் தெரியாது பழமொழி

ஒரு நாள் முல்லா தெருவில் சென்றுகொண்டிருக்கும் போது திடீரென ஒரு நாய் குரைத்துக் கொண்டே முல்லாவை துரத்தத் துவங்கிவிட்டது. அதனிடம் இருந்து தப்புவதற்கு முல்லாவும் எடுத்தார் ஓட்டம். இதனைக் கண்ட முல்லாவின் நண்பர் ஒருவர் அவரைச் சீண்ட நினைத்து "என்ன முல்லா குரைக்கிற நாய் கடிக்காது எனும் பழமொழி உங்களுக்குத் தெரியாதா?" என்றார். அதற்கு முல்லா "எனக்குத் தெரிந்து என்ன பிரயோசனம்? இந்த நாய்க்கு அல்லவா தெரிய வேண்டும்" என்றார் சூடாக.

# முத்துமாலை...!

அலி (ரலி) கலீபாவாக (இஸ்லாமிய ஆட்சித் தலைவராக) இருந்த நேரம்.

ஒருமுறை பைத்துல்மாலுக்கு (அரசக் கருவூலத்திற்கு) முத்து மாலையொன்று வந்தது.

பளீரென வெள்ளை வெளேரென்று மின்னுகின்ற முத்துக்களும் ஜொலிக்கின்ற பவளங்களுமாக அந்த முத்துமாலை பார்ப்பதற்கு மிகவும் அழகானதாக, இதயங்களைக் கொள்ளை கொள்வதாக இருந்தது.

அலி (ரலி) அவர்களின் மகளுக்கு அந்த முத்து மாலையைப் பார்த்ததும் மிகவும் பிடித்துவிட்டது.

"இன்னும் ஒரிரு நாட்களில் பெருநாள்...! பெருநாள் அன்று புத்தாடையணியும் போது அந்த முத்து மாலையும் போட்டுக் கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்..." என அந்த மங்கையின் உள்ளத்தில் ஆசைகள் கிளர்ந்தெழுகின்றன.

பெருநாள் அன்று மட்டும் மாலையை அணிந்து இருந்து விட்டு அடுத்த நாளே திருப்பிக் கொடுத்துவிடலாம் என்றும் அந்த மங்கை நினைக்கின்றாள்.

உடனே பைத்துல்மால் நிர்வாகிக்கு அந்த முத்துமாலையை மூன்று நாட்களுக்கு மட்டும் இரவலாகக் கொடுக்கும்படி வேண்டுகோள் விடுத்து ஆள் அனுப்புகிறாள் மங்கை.

பெருநாள் அன்று அலி (ரலி) அவர்களின் அன்பு மகள் ஆசையுடன் அந்த மாலையை அணிந்து கொண்டு, வீட்டில் வளைய, வளைய வருகின்ற போது சூரிய ஒளி பட்டு அந்த முத்துக்கள் ஜொலிக்கின்றன.

பெருநாள் தொழுகைக்காக மும்முரமாகத் தயாராகிக் கொண்டிருந்த அலி (ரலி) அவர்களின் பார்வையில் அந்த முத்து மாலை படுகின்றது.

உடனே அடையாளம் கண்டு கொள்கின்றார் கலீபா.

" நான் இந்தச் சிறுமியின் கையை வெட்டிவிடுவேன். பைத்துல்மாலிலிருந்து இவள் இதனைத் திருடி இருக்கிறாள்" என்றார்கள்.

மகளை அழைத்து அதட்டிக் கேட்கின்றார். மழலை மனம் மாறாத அந்த மங்கையின் முகத்தில் முத்துக்களாகக் கண்ணீர் மொட்டுக்கள் உதிர்கின்றன.

"நான் இரவலாக பைத்துல்மால் நிர்வாகியின் அனுமதி பெற்றே வாங்கினேன், நாளைக்கே திருப்பிக் கொடுத்து விடுவேன்." என்று கண்ணீர் மல்கக் கூறுகின்றாள் கலீபாவின் மகள்.

இதனைக் கேட்டதும் அக்கணமே பைத்துல்மால் நிர்வாகியைக் கூப்பிட்டனுப்புகிறார் அலி (ரலி).

தொழுகைக்கு நேரமாகின்றதே என்ற கவலையையும் உதறிவிட்டு முத்துமாலை பிரச்சினையைத் தீர்ப்பதில் முனைப்புடன் ஈடுபடுகின்றார், அவர்.

அரக்கப் பறக்க வருகிறார், பைத்துல்மால் நிர்வாகி அலி (ரலி) கோபமாக இருப்பதைப் பார்த்து வியப்பில் மூழ்கி விடுகிறார். "என்ன ஐயா, நிர்வாகி நீ? முஸ்லிம்களின் பொதுச்சொத்தில் மோசடி செய்யலாமா?" என்று அலி (ரலி) கர்ஜிக்கின்றார்.

நடுநடுங்கிப் போகிறார், நிர்வாகி.

நானா? மோசடி செய்தேனா? நிச்சயமாக நான் எந்த மோசடியையும் செய்ததில்லையே?" என மனம் பதைக்கச் சொல்கிறார்.

"இந்த முத்து மாலையை இவளிடம் ஏன் கொடுத்தீர்?" மகளின் கழுத்திலிருந்து உருவிய முத்துமாலையைக் காண்பித்து கேட்கிறார் அலி(ரலி).

"அவர் மூன்று நாட்களுக்கு மட்டும் இரவலாகக் கேட்டார். பெருநாளுக்கு அடுத்த நாளே திருப்பி கொடுத்து விடுவதாகவும் வாக்களித்தார். அதனால் தான் கொடுத்தேன்" என சமாதானம் சொல்கிறார் நிர்வாகி.

" இது மோசடியில்லையா? முஸ்லிம்களின் அனுமதி இல்லாமல் நீர் எப்படி இவ்வாறு நடந்து கொள்ளலாம்? உடனே இந்த முத்து மாலையைப் பைத்துல் மாலில் சேர்த்துவிடுங்கள். அவள் மட்டும் உமது அனுமதியுடன் இரவலாக வாங்காமல் திருடியிருந்தால் இந்நேரம் அவளது கையை வெட்டியிருப்பேன்." என்றார்கள் அலி (ரலி).

முத்துமாலை பைத்துல்மாலில் சேர்க்கப்பட்டது.

நன்றி
காலடிச் சுவடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Business View

## ADVERTISEMENTS

## காணி, கட்டிடங்கள்

(அவசர தேவை கருதி)
**கடை விற்பனைக்கு**
நிக்கவரெட்டியவில்
2 மாடிக் கடை விற்பனைக்கு உண்டு
நீளம் 15' X அகலம் 13'
விலை: 85 இலட்சம்
Ref: FA-2/004

(அவசர தேவை கருதி)
**வீடு விற்பனைக்கு**
கசாவத்தையில்
11 பேர்ஸ்சில் அமைந்துள்ள இரண்டு மாடி வீடு விற்பனைக்கு உண்டு
Ref: FA-2/005

**காணி விற்பனைக்கு**
வரக்காமுற
(மாத்தளை பிரதான வீதிக்கு அண்மையில்)
தொழிற்சாலைக்கு உகந்த சூழலில்
2.5 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு
Ref: FA-2/006

07ம் கட்டையில் இருந்து
சுமார் 500 M தொலைவில்
தெல்கஸ்தென்ன
பாதையோடு இணைந்த 64 பேர்ஸ்
காணி விற்பனைக்கு உண்டு
பேர்ஸ் 85000/=
Ref: FA-2/005

காணி, கட்டிடங்கள் வாங்க வேண்டுமா?
விற்க வேண்டுமா?
தொடர்புகளுக்கு: 081-7201234

அக்குறணை தெல்கஹகொட
(அஸ்ஹர் கல்லூரிக்கு அருகாமையில்)
12 பேர்ஸ் காணி
விற்பனைக்கு உண்டு
Ref: FA-2/006

துனவில பிரதான வீதியில்
(அக்குறணை நகரிலிருந்து 300 மீட்டர் தூரத்தில்)
8.5 பேர்ஸில் அமைந்துள்ள கட்டிடம்
விற்பனைக்கு உண்டு

அக்குறணை நகரிற்கு அண்மித்த பகுதியில்
ஒரு சாதாரணக் குடும்பத்திற்கு உகந்த வகையில்
வீடு தேவை
Ref: FA-2/009

கண்டி பிரதான வீதி கம்பளையில்
சுமார் 14X60 அடி நீளமான
கடை விற்பனைக்கு உண்டு

கம்பளை - கீரபொலயில்...
40 பேர்சஸ் காணியில்
வீடு விற்பனைக்கு உண்டு
Ref: FA-2/010

சகல வசதிகளுடன்
கண்டி அனிவத்த River Dale வீதியில்
27 பேர்ஸ் காணியில்
இரு வீடுகள்
விற்பனைக்கு உண்டு.
Ref: FA-1/001

உங்கள் காணி, கட்டிடங்களை
இலவசமாக விளம்பரம் செய்து
இலகுவான முறையில்
விற்பனை செய்வதற்கு
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

emex
Eminent Exert
190/2/1, Market Complex, Akurana,
Sri Lanka.
Tel: 081-7201234 Fax: 081-2300055
e-mail: emex.lk@gmail.com


**VACANCY**
அக்குறணையில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு
Corel Draw, Adobe Photo Shop
நன்கு அனுபவமுள்ள
Graphic Designer தேவை
தொடர்புகளுக்கு 0777 805792

**Group Classes**
A/L
Accounting & Business Studiess
**MM Faizal**
B.Com (Hons) PGD in Edu. HNDA - II
0777 202389

**Building Estimating**
உங்களுடைய சகல விதமான
கட்டிடங்களுக்கான உத்தேச செலவினங்களை
மதிப்பீடு செய்து கொள்வதற்கு
தொடர்பு கொள்ளுங்கள்.
071-4876950

LANKA BELL CDMA

Available @
Callpoint - Akurana
Tel: 081-4903039

Nokia 5320 XpressMusic

Dynamic design with smooth high-gloss surface.
Excellent music experience-High-quality sound, dedicated music keys.
Up to 24 hours of playback time.
3.5mm jack and high-speed connection for music downloading.
Find and share media content online.
Say & Play: Voice controlled music playback feature.
Available @
Callpoint - Akurana
Tel: 081-4903039


Sony Ericsson
W910i
2.0 Megapixel
Available @
Callpoint - Akurana
Tel: 081-4903039


ஒப்பு நோக்குனர் தேவை
(Proof Reader)

Monthly News View
பகுதி நேர கடமைக்காக
ஒப்பு நோக்குனர் தேவைப்படுகின்றார்.
தமிழ் மொழியில் சிறப்புத் தேர்ச்சியும், மொழியாற்றலில்
ஈடுபாடு காட்டுபவர்களும் விண்ணப்பிக்கவும்.

Emex Publication
190/2/1, Market Complex, Akurana, Sri Lanka.
Tel: 081-7201234 Fax: 081-2300055
e-mail: editor.nv@gmail.com


MOTHER CARE
(BABY SHOP)
EVERYTHING FOR BABIES, MOTHER TO BE & MOTHER
SPECIALIST IN BABY COTS, BABY STROLLERS, & TOYS

19, DS SENANAYAKA VEEDIYA, KANDY. TEL: 081-2203077


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports View

## இஸ்டடி சென்டர் விளையாட்டுப் போட்டி

அக்குறணையில் இயங்கி வருகின்ற இஸ்டடி சென்டர் அதன் 19ஆவது வருடாந்த விளையாட்டுப் போட்டியினை கடந்த ஆகஸ்ட் மாதம் 23, 24ம் திகதிகளில் அஸ்ஹர் மத்திய கல்லூரி மைதானத்தில் சிறப்பாக நடாத்தியது. 1989ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இஸ்டடி சென்டர் அக்குறணையின் பல பகுதிகளிலும் 16 கிளைகளைக் கொண்டுள்ளது. இக்கிளைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளில் வித்தியாசமான, விறுவிறுப்பான நிகழ்ச்சிகள் அமையப் பெற்றிருந்தது சிறப்பம்சமாகும். இதன் சில காட்சிகளை காணலாம்.















## Power Boys

### 18 வது வருட கிரிக்கெட் சுற்றுப்போட்டி

ஒக்டோபர் 3,4,5 ம் திகதிகளில் அணிக்கு 11 பேர் கொண்ட (Tape Ball) கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றினை அஸ்ஹர் கல்லூரி மைதானத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அக்குறணையிலுள்ள பிரபல 16 அணிகள் கலந்து கொள்ளும் மேற்படி சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்விற்கு பிரதம அதிதியாக பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் M.R.M. ரிஸ்வி கலந்து சிறப்பிக்க உள்ளதாக ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் MHM ரிபாஸ் தெரிவித்தார். அக்குறணை Age of Fashion இச்சுற்றுப் போட்டிக்கு அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. ■


MONTHLY News View

## CLASSIFIEDS

**Vacancy**

**Binder, Machine Minder**
Salary Negotiable
City Printers
Akurana.
081-2300309

**For Sale**

**Dual Core 3.0**
2GB RAM, 256-VGA on Board, 160 HDD, DVD RW,
2 Years Warranty
Tel: 081-2301175

**29" Used HITACHI TV**
for immediate Sale
077-4040909

**2GB Flash Drive**
விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு 077 3055637

**Sony Ericson P1i**
**Touch Screen, 3.2 Mega Pix**
விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு 071-7389870

புளுகொஹதென்னையில் முக்கு மற்றும் Concrete போடுவதற்குத் தேவையான சகல சாமான்களும் விற்பனைக்கு உண்டு.
தொடர்களுக்கு 081-2303962

**Wanted**

பாவித்த Pulsar Bike தேவை
180 Digital Meter
தொடர்புகளுக்கு 077 3869697

**Services**

October மாதம் முதல் US Green Card ற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. விண்ணப்பிப்பதற்கான சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு,
Hira Internet Café - 077-4111771

அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர் சேவையை பெற்றுக் கொள்ள 077-6403491

**மௌலவி ஆசிரியர் போட்டி பரீட்சை 2008 / 2009**

**கருத்தரங்கு வகுப்பு - 9.00 - 3.30**
(6 வகுப்புகளில் பாடத்திட்டம் முழுமையாக பூர்த்தி)

| | |
|---|---|
| காலம் | ஒக்டோபர் 11, 18, 27<br>நவம்பர் 8, 9, 12 |
| இடம் | கண்டி-கட்டுகஸ்தோட்டையில் அல்-ஹம்ரா முஸ்லிம் வித்தியாலயம்<br>(K/Anthony's Convent க்கு அருகில் உள்ள Weerakoon Garden Road இல் Churchக்கு முன்பாக) |
| விரிவுரை | A.H.M. Nazeer(SLAS - I) |
| கட்டணம் | Tute உட்பட நாளொன்றிற்கு 350/= மட்டுமே |

வினா - விடை விற்பனைக்கு ☞ உளச்சார்பு- 150/=
☞ பொது அறிவு - 150/= தபால் செலவு - 75/=

**தபால் மூல கற்றல்** (6 தொகுதிகள் மூலம்,) (ஒவ்வொரு தொகுதியும் இரு பாடப்பரப்பையும் கொண்டது) நுட்பங்களுடன் கூடிய இத்தொகுதிகளுக்கு தபால் செலவு உட்பட **600/=** மட்டுமே.

Money Order / Cheque அனுப்பி பெறலாம்.

கமநல சேவை மற்றும் பரீட்சைக்கு புத்தகங்களுக்கும், கருத்தரங்குகளுக்கும்.

தொடர்புகளுக்கு: **A.H.M. NAZEER (SLAS-I)**
193/1, Madawala Road, Katugastota.
Tel : 060-2809557, Mob : 071-4395341

**M N S B**
**Haj & Umrah Group**

புனித ஹஜ் கடமையை சிறப்பான முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்கு நீண்டகால அனுபவம் கொண்ட எமது குழுவினரை தொடர்பு கொள்ளுங்கள்
(குறிப்பிட்ட தொகையினரே அழைத்துச் செல்லப்படவுள்ளனர்)

**011-2508069 / 077-6745778**

குர்பான், விமான டிக்கட் இன்றி

**265000/-** மட்டுமே

**பெண்களுக்கான விசேட வழிகாட்டல்**

No: 18-5/1, Colling Wood Place,
Wellawatte, Colombo-06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spors View உள்ளே...

FOR YOUR DREAM STYLE

AGE OF FASHION

Waragashinna
(Thelumbugahawatta Junction)
Akurana.

عيد مبارك

இனிய நோன்புப் பெருநாள்
வாழ்த்துக்கள்



ABC Barakah
Once again
declares Highest profits
in Islamic Finance

22.35%

Insha Allah soon
in Akurana

educational package Ta'leem
a helping hand for a bright future....

Safar
fly with Barakah wings

Ijarah
key to your asset

ilaaj
your health is our happiness

TIFL
Children's Investment Account

ABC Barakah
CREDIT CARD
1st Islamic Credit Card in Sri Lanka

Murabahah
boosting import & local trading

maximize your profits
mudharabah

Musharakah
equity at its best....

ABC Investments Ltd
Barakah Islamic financial services
388, Galle Road, Colombo 03
Tel: 011 5878600
www.abcinvestments.lk
barakah@abcinvestments.lk

Pettah Branch
254, Main Street
Colombo 11
Tel: 011 5746846

Kandy Branch
129, Kotugodella Veediya,
Kandy
Tel: 081 5633799

Ladies Branch
388, Galle Road,
Colombo 03
Tel: 011 5878600

Published by EMEX Publication, 190/2/1, Second Floor, Market Complex, Akurana. Printed @ Wings Graphics, 262 A, Kandy Road, Galhinna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org